Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 12 செவ்வாய்க்கிழமை (24.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 207


நட்புறவை வலுப்படுத்த... (12)


நாச்சியப்பன் சொன்னது! (10)


வளமான வாழ்வை நோக்கி... (04)


தேசிய மட்டத்தில் தந்தையும் மகனும் (07)


பழமை வாய்ந்த சங்கானைக் கோட்டை (15)

# தீர்வு விடயத்தில் நாடாளுமன்றில் நம்பிக்கை கொள்ளாதது ஏன்?

## எதிர்க் கட்சிகளைக் கேட்கிறது அரசு



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐ.தே.கட்சியும் தெரிவுக்குழுவில் இடம் பெறவேண்டும். ஆனால் தீர்வு விடயம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றில் நம்பிக்கை வைக்க ஏன் தயங்குகின்றன என்பதுதான் புரியவில்லையென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சில அரசியல் கட்சிகள் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் பொய்யான தகவல்களை வெளியிட்டமை குறித்து கவலை அடைகின்றோம். நாட்டின் பிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்ளவேண்டுமே தவிர அதனை வேறுநாட்டின் பிரதிநிதிகளிடம் கூறுவது முறையல்ல. இந்திய தூதுக்குழுவில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சியென பல மொழி பேசும் பிரதிநிதிகள் பல தரப்பினர் காணப்பட்டனர். ஆனால் அவர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறியதும் தாங்கள் அனைவரும் இந்தியர்கள் என்ற அடிப்படையில் செயற்பட்டனர். மாறாக தமது நாட்டின் அரசியல் பிரச்சினைகளை இங்கு கூறவில்லை. அதனை நாம் உதாரணமாகக் கொள்ளவேண்டும்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## நோர்வே, கனேடிய குழு குடாநாட்டிற்கு விஜயம்

நோர்வே மற்றும் கனேடிய நாடுகளின் இராஜதந்திரிகள் குழு நாளையும் எதிர்வரும் 28 ஆம் திகதியும் யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது. நோர்வே நாட்டின் உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் அநநாட்டின் உயர் அதிகாரிகள் குழுவினர நாளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றனர். இவர்கள் அன்றைய தினம் பிற்பகல் யாழ். செயலக்திற்கு விஜயம் செய்து அரச அதிபரைச் சந்தித்து குடாநாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரியவருகின்றது. அத்துடன் மேலும் சிலரைச் சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 28 ஆம் திகதி கனேடிய நாட்டின் அதிகாரிகள் குழுவொன்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது. இக்குழுவினர் காலையில் யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்து அரச அதிபருடன் யாழ் குடாநாட்டின் தந்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர்.

## யாழ். மே தினத்தை குழப்ப அரசாங்கம் தீவிர முயற்சி

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

எதிர்க்கட்சிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள மேதினக் கூட்டத்தை குழப்புவதற்கு, அரசாங்கமும், அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட சக்திகளும் தீவிரமாக முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க குற்றம் சாட்டியுள்ளார். எனினும் ஏற்படுத்தப்படும் சகல சவால்களையும் முறியடித்து, யாழ் நகரில் மேதினக் கூட்டம் நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிட்டுள்ள மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கலந்து கொள்ள உள்ளன. இந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு தோல்வியை சரிசெய்ய கிழக்கிற்கு முன்கூட்டி தேர்தல்

### கூறுகிறார் அமைச்சர் ஹக்கீம்

வடக்கில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் ஏற்படப்போகும் தோல்வியைச் சரிசெய்வதற்காகவே கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்த ஆலோசிக்கப்படுகிறது. எனினும் முன்னரே தேர்தலை நடத்துவது பிழையான விடயமென அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நான் போட்டியிடப் போவதாக அரசாங்கமே வேண்டுமென ஒரு கதையை உருவாக்கி விட்டுள்ளது. இதை நான் சந்தேகத்துடனேயே பார்க்கிறேன். இந்தக் கதையானது கட்சி நலனையோ என்னுடைய நலனையோ பிரதானப்படுத்தி உருவாக்கப்பட்ட தொன்றல்ல. ஒரு குழறுபடியினை உருவாக்குவதே இந்தக் கதையின் உள்நோக்கமாகும். இதற்கு நிறையப் பேர் இப்பொழுதே இரையாகிவிட்டார்கள். கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்


(19) ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவில் இணைய வேண்டுமென்ற இந்தியக் குழுவின் கோரிக்கை கூட்டமைப்பால் நிராகரிப்பு

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சேர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்துவிட்டது. இந்தக் குழுவில் சேரவேண்டும் என்று இந்திய எம்.பி.க்கள் குழுவினர் விடுத்த கோரிக்கையை கூட்டமைப்பு நிராகரித்துவிட்டது. இது தொடர்பாக 'தினமணி' நிருபரிடம் கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியது:

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு அக்கறையுடன் முயற்சித்து வருகிறது என்று உலகத்தை நம்பச்செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படுகிறது. இது ஏமாற்று வேலை. தாமதப்படுத்தும் தந்திரம்.

இதற்கு முன் இலங்கை அரசு அமைத்த நாடாளுமன்றக் குழுக்கள், ஆணையங்கள், குழுக்கள் போன்றவை தந்திருக்கும் அனுபவங்களில் இருந்து இந்த



முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. வரும் நவம்பர் மாதம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஊரியால் வந்த வினை மூவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

பக்கத்து வீட்டுக்காரருடன் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் முடிவடைந்தது. இக் கைகலப்பில் ஈடுபட்ட மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மணியம்தோட்டம் பகுதியில் நேற்று மாலை 4.00 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த டயஸ் (வயது-45) சியான் (வயது-25) செல்வர் தீபன் (வயது-25) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கடற்றொழிலுக்குச்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச அழுத்தங்களுக்கு இரட்டை வேடமே காரணம்

### அரசு மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் இரட்டை வேடமே, நாட்டின் மீதான சர்வதேச அழுத்தங்களுக்குக் காரணமென குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு புதுவருடம் கொண்டாடி விட்டுச் செல்ல இலங்கை வரவில்லை எனத் தெரிவித்துள்ளது. நாட்டின் தேசிய பிரச்சினை என்பது விளையாட்டு அல்ல என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தததாவது,

யுத்தம் முடிந்த பின் முகாம்களில் உள்ள மக்களைப் பார்வையிட எமக்கு அனுமதி அளிக்கப்படவில்லை எனவும் பாதுகாப்புச் செயலாளருக்கு கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதியும் அனுமதி அளிக்கவில்லை. ஆனால் இந்தியக் குழுவினருக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

### ஐ.நா. மனித உரிமைப் பேரவையில்

## புதிய நாடுகளின் ஆதரவை திரட்ட அரசு இராஜதந்திர ரீதியில் முயற்சி

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தொடரில் அங்கத்துவ காலம் நிறைவடை யவுள்ள நாடுகளுக்குப் பதிலாகப் புதிதாக அங்கத்துவம் பெறும் நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியிலான இராஜதந்திரமட்ட காய் நகர்த்தல்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஓர் அங்கமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நேரடியாகக் களத்தில் இறங்கிப் புதிதாக அங்கத்துவம் பெறும் நாடுகளுக்கு விஜயம் செய்து, அந்நாடுகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக அறிய முடிகின்றது. ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் அடுத்த கூட்டத்தொடரின்போது தமக்கு எதிராக மீண்டும் பாதகமான நிலைமைகள் ஏதும் ஏற்படுமாயின்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மே தின எழுச்சிக்கு தயாராகிறது தீவகம்

(வேலணை)

தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு நடத்தப்படவிருக்கும் மே தின எழுச்சிக்குத் தாயாராகுமாறு தீவக மக்களுக்கு வேலணை பிரதேச சபையின் தவிசாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் மே தின ஊர்வலத்தில் அனைத்து மக்களையும் ஓரணியில் ஒன்றுசேர்ந்து உழைக்கும் கரங்களை உறுதிப்படுத்தி அசைக்கமுடியாத குரலோடு எமது தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்னும் தொனிப்பொருளில் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு உடனடி வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், விதவைகளுக்கான சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னிறுத்துதல் மற்றும் இடம்பெயர்ந்த மீள்குடியேறிய மக்களுக்கு அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் எனப் பலவகையான கோஷங்களோடு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தனித்துவமான பேரணியில் பங்குகொள்ளும்படி வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா அனைத்து உறவுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, பேரணிக்கான அனைத்துப் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (85)

## சைக்கிள் திருடன் மடக்கிப் பிடிப்பு

(ஆனைக்கோட்டை)

நவாலிப் பகுதியில் திருட்டுப் போன சைக்கிள் ஆனைக்கோட்டையில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நவாலி சங்கையான் வீதியில் வசிக்கும் நபரொருவர் தனது சைக்கிளைத் தனது வீட்டு முற்றத்தில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றுள்ளார்.

பின்னர் 7 மணியளவில் வீட்டின் உள்ளே நுழைந்த திருடர் கோஷ்டி சைக்கிளை எடுத்துச் செல்லவே சைக்கிள் உரிமையாளர் இதனை அவதானித்து திருடர்களை அயலவர்களின் உதவியுடன் துரத்திச் சென்றவேளை அந்தச் சைக்கிள் ஆனைக்கோட்டைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

எனினும், நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிளைத் திருடன் மீண்டும் எடுக்க வந்தபோது குழுமி நின்ற மக்களால் திருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டதுடன், சைக்கிளும் மீட்கப்பட்டு சைக்கிளுடன் திருடனைப் பிடித்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (104)

# சிறுபோக நெற்செய்கை கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் சிறுபோக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மை நாட்களாக வன்னிப் பகுதிகளில் கனமழை பெய்து வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்திலும் அதிக மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதி விவசாயிகள் இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களம் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விவசாய நிலங்களையும், நீர் வசதிகளையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டிருக்கின்றது.

போதியளவு மழை வீழ்ச்சி ஏற்படுமிடத்து இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் விவசாய திணைக்களத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# அரியாலையில் குறைகேள் சேவை

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையினால் அரியாலை, நாவலடியில் குறைகேள் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. நாவலடியிலுள்ள முன்பள்ளி மண்டபத்தில் நாளை காலை இச்சேவை நடைபெறவுள்ளது.

வீதி அபிவிருத்தி, வீடு, மலசலகூடம், கட்டடங்களை அமைத்தல், சோலைவரி, சனசமூக நிலையப் புனரமைப்பு, மீள்குடியேற்றப்பட்ட மக்களின் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான தீர்வுகள்ளை இந்நடமாடும் சேவை மூலம் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சேவையின் போது, பலா, தேசி போன்ற மரக்கன்றுகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்களும் வழங்கப்படும்.

மாதர் சங்கம், விளையாட்டுக் கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய கழகங்களையும் மற்றும் நிலைய நிர்வாகிகள், உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு தவிசாளர் ப. வசந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதேசசபை தவிசாளர், உறுப்பினர்கள் ம்ற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருப்பார்கள். (137)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலா[illegible]

வெற்றிடமாகவுள்ள IAB தரப் பாடசாலையான யா/இந்து மகளிர் கல்லூரி அதிபர் பதவிக்கான விண்ணப்பம் யா/கல்வி வலயப் பாடசாலையில் பணிபுரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவை, வகுப்புI அல்லது வகுப்பு 2-I ஐச் சேர்ந்த அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை மே 9 இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# உலக புத்தக தின நிகழ்வு

(இணுவில்)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொதுசன நூலகத்தினர் மாணவர்களுக்கான புத்தக தின கொடி சூட்டும் நிகழ்வையும், புத்தக தின நிகழ்வையும் இன்று தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில், உடுவில் பொது நூலக எல்லைக்குட்பட்ட எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

'கனகசபை லேன், சிவ்லிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1350)


## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் மே 14 கற்பகத் திருவிழாவும், மே 15 தேர்த் திருவிழாவும், மே 16 தீர்த்தோற்சவ திருவிழாவும் நடைபெறவுள்ளன. (பா)




# புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்

'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்கள் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.

புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்படவேண்டும்.

ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின் Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களிலீ நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும்

முதலிடத்துக்கு 10,000/=,

இரண்டாம் இடத்துக்கு 7,000/=,

மூன்றாம் இடத்துக்கு 5,000/=

அத்துடன் 10 புகைப்படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

சுதந்திர ஊடகக் குரல்
இல.347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்



விளம்பர அனுசரணை:
யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

(C/1450)




உலக புத்தக தினத்தினை முன்னிட்டு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் பொது நூலகம் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்திய புதிய நூல் சேர்க்கைகளின் கண்காட்சியினை பாடசாலை அதிபர் திருமதி.சந்திரகுமார் மற்றும் மாணவர்கள் பார்வையிடுவதைக் காணலாம்.

# சுகாதாரமற்ற உணவகங்களுக்கு யாழ்.நீதிமன்றத்தால் அபராதம்

## சுகாதாரப் பரிசோதகர் அதிரடி நடவடிக்கை

சுகாதாரமற்ற முறையில் இயங்கிய மூன்று உணவகங்களுக்கு யாழ்.நீதவான் நீதிமன்றம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

பலாலி வீதி, திருநெல்வேலி, காங்கேசன்துறை வீதி கொக்குவில், குளப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள உணவகங்களே சுகாதாரப் பகுதியினரிடம் சிக்கிக்கொண்டவையாகும்.

கடந்த மாதம் 10 ஆம் திகதி கொக்குவில் பகுதி சுகாதாரப் பரிசோதகர் க. அனுஷன் அப்பகுதியில் நடத்திய உணவகங்கள் மீதான திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போதே இம் மூன்று உணவகங்களும் சுகாதாரச் சீரழிவுடன் இயங்கி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவ் உணவகங்களின் உரிமையாளர்கள் மீது யாழ்.நீதிமன்றத்தினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து யாழ்.நீதவான் மா.கணேசராஜா இவர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கொக்குவில், குளப்பிட்டி உணவகங்கள் இரண்டாவது தடவையாகவும், திருநெல்வேலி உணவகம் மூன்றாவது முறையாகவும் நீதிமன்றில் அபராதம் செலுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (137)

உண்மையும் பொய்யும் இவ்வுலகில் கலந்தே இருக்கின்றன. தயிரில் வெண்ணையைப் பிரித்தெடுப்பதுபோல, உண்மையை மட்டும் தேர்ந்தெடுங்கள். உண்மையின் பக்கமே இறைவன் இருக்கிறான்.

- சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## பிளவுபடும் தேசியங்கள்!

புலிகளின் கொலைப் பட்டியலில் முதலில் இருந்தது எனது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ, அதற்கடுத்ததாக இருந்தது இரா.சம்பந்தன் அவர்கள்தான் என்று இந்தியத் தூதரக விருந்தின் போது பஸில் ராஜபக்ஷ தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருக்கிறது. அந்த விருந்தில் அவர்களுடனிருந்த சம்பந்தன், ஆம் அது தனக்குத் தெரியும் என்று ஆமோதித்ததாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளின் பட்டியலில் யார் யாரெல்லாம் இருந்தார்கள், யார் யாரெல்லாம் புதிது புதிதாய் நாளும் பொழுதும் சேர்ந்து கொண்டிருந்தார்கள் என்பதெல்லாம் எல்லோருக்குமே தெரிந்ததுதான். அதைத் திரும்பத் திரும்ப நோண்டுவதில் ஒன்றுமில்லை.

ஆனால், புலிகளும் தமிழ்த் தேசியத்துக்காகப் போராடினார்கள்; சம்பந்தன் போன்றவர்களும் தமிழ்த் தேசியத்துக்காகவே ஆக்ரோசமாக நின்றார்கள் என்றவகையில், புலிகளுக்கு இவர்கள் துரோகிகளாகப் பட்டது எவ்வாறு என்பதே நம் கவனத்துக்குரியது.

தேசியம் என்பதும் ஒருபடித் தன்மையதாய் இல்லை என்றே நாம் புரிந்து கொள்கிறோம். தேசிய உணர்வுகளுக்கும் கூடத் துரோகப் பட்டம் கட்டிவிட, எப்போதும் அதிதீவிரத் தேசியவாதமும் இருந்துகொண்டிருக்கிறது. இந்த அதிதீவிரத் தேசியவாதம், மற்றைய யாவற்றையும் மறுப்பதாகவும், பெரும்பாலான மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் பெரும்பான்மை வாதத்தைத் தூக்கிப் பிடிப்பதாகவும், சுத்திகரித்தல் மூலம் தனித் தன்மை மற்றும் பெருமிதங்களை நோக்கிச் செல்வதாகவும் இருக்கிறது.

பன்முகத் தன்மை கொண்டதாகவோ, தன்னை உள்ளார்ந்து நோக்குவதாகவோ, பல்சிந்தனை ப்ல்முரண்களை உள்ளடக்கியதாகவோ அது இல்லை. மற்றவற்றின் மீது சகிப்புக் கொண்டதாகவும் இல்லை. மாறாக, இனவாத, நிறவாதத்தின் கூறுகளுக்கே நெருங்கிச் செல்கிறது. குறிப்பாகச் சொல்வதாயின், சமத்துவம், உலகமயமான நாகரீகம், பல்கலாசாரம் போன்றவற்றை அது மறுத்துவிடுகிறது.

இவ்வாறான தேசியம் மற்றுமொரு ஒடுக்குமுறைக் கருவியாக மாறும் என்பதை புலிகள் கால அனுபவத்திலிருந்து அறிவோம். இன்று அந்த இடத்தை நிரப்புகிற அதிதீவிரத் தேசியவாதம் பேசுவோர், சமூகத்தை மேலும் மேலும் உட்சுருங்க வைத்துக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

இதனால்தான் பழிக்குப்பழியும், விட்டுக்கொடாமையும் பகை வெறுப்பும் நமக்குள்ளிருந்து இன்னும் களைய முடியவில்லை. நல்லிணக்கத்திற்காக இறங்கிப் பேசக்கூடிய மனத்திட்பம் நம்மில் பெரும்பான்மையோர்க்கு இன்னும் வாய்க்கவில்லை.

இந்தத் தீவிரமும் வன்முறைப் பேச்சும், இன்றைய உலக ஒழுங்கில் நம்மை மேலும் மேலும் அழித்துவிட அனுமதிக்கும் மூடத்தனங்களாகவே அமையும். நாமும் நம் குழந்தைகளும் வாழ்வதற்கான விவேகத்தையே, தேசியம் நமக்குக் காண்பிக்க வேண்டும். அமைதியும் அழிவோலங்களற்ற சுபீட்ச வாழ்வும்தான் நம்மில் பெரும்பான்மையோர் விருப்பம். அதற்கு இந்த அதிதீவிரத் தேசியவாதம் ஒருபோதும் உதவாது.

மனிதர்கள் அடிப்படையில் ஒருவருக்கொருவர் இதமாக நடந்துகொள்வதில் மகிழ்ச்சியடையக் கூடியவர்களே. வேறுபாடுகளை முன்வைத்து வலிந்து புனையப்படும் வன்மமும் துவேசமும் எப்போதும் பெரும்பான்மையான சாதாரண மக்களுக்கு விரோதமானது.

இணக்கத்தை வெளிப்படுத்துகிற ஒவ்வொரு சமயத்திலும் நாம் மனிதர்களாக மற்றவர்களை விட உயர்ந்துவிடும் பெருமையை அடைவோம். நாம் ஒன்றுசேர்ந்து ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஆதரவாகவும் இருந்தால்தான் நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்க முடியும். மக்களது வாழ்வுக்கு வழிகாட்டுவோர் இதையே சிந்திப்பர்.

– ஆசிரியர்

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகள் நிறைவேற்ற இணக்கம்

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோருடன் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர்கள் அடங்கிய குழு சந்திப்பில் ஈடுபட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில வடமாகாண கல்வி அலுவலகத்தில் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. நேர்மையாகவும், நீதியாகவும், செயற்படவேண்டும். இதன் மூலமே வடமாகாணத்தை அபிவிருத்தி செய்ய முடியும்.

ஆசிரிய இடமாற்றத்தில் ஏற்படும் தடங்கல்கள் உடனடியாகத் தீர்ப்பதற்கு கல்வி நடவடிக்கைகள் தடைப்படாமல் சீர் செய்யப்பட வேண்டும். வன்னிப் பிரதேசத்திற்குள் இடமாற்ற மேன்முறையீட்டு சபையின் விண்ணப்பங்கள், உரிய இடமாற்றங்கள் காலக்கிரமத்தில் வழங்கப்பட வேண்டும்

வடமாகாண கல்வி அலுவலகங்களில் நடைபெறும் எந்தவொரு இடமாற்றங்களும் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய இடமாற்றச் சபைகளூடாக மட்டும் நடைபெற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை தாம் செயற்படுத்துவதற்காக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உறுதியளித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (12)

## டெங்கொழிப்பு சிரமதானம்

(வவுனியா)

பாடசாலை மட்டத்தில் டெங்கொழிப்புச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் வழங்கிய அறிவுரைக்கமைய வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைத்து பாடசாலைகளிலும் நேற்று முன்தினம் டெங்கொழிப்பு சிரமதானம் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர்களின் கணகாணிப்பின் கீழ் இடம்பெற்ற இச்சிரமதானப்பணிகளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் பங்குபற்றியிருந்தனர். வவுனியாவில் ஏற்கனவே சுகாதாரத் திணைக் களத்தின் ஊடாக டெங்கொழிப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போது பாடசாலை வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்நத மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பும் காணப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (125)

## பண்ணை - ஊர்காவற்துறை வீதி "காப்பற்" இடும் பணி துரிதம்

பண்ணை ஊர்காவற்றுறை வீதிக்கு "காப்பற்" இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்பட்ட இவ்வீதியின் (பண்ணையல் இருந்து) சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான புனரமைக்கப்பட்ட பகுதிக்கே இவ்வாறு "காப்பற்" இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

ஏற்கனவே புனரமைக்கப்பட்ட இவ்வீதிக்கு "காப்பற்" இடும் பணிகள் தாமதமடைந்திருந்ததனை அடுத்து அண்மையில் பெய்த மழை காரணமாக அவ் வீதியில் நீர்தேங்கி வீதியைச் சேதப்படுத்தியிருந்தமையும் அதனை தினமுரசு சுட்டிக்காட்டியிருத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த சனிக்கிழமை முதல் குறித்த வீதிக்கு "காப்பற்" இடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (பா)

## சுன்னாகம் சந்திப்பகுதியை ஒளியேற்றுமாறு கோரிக்கை

(சுன்னாகம்)

சுன்னாகம் சந்திப்பகுதியின் வீதி மின் விளக்குகள் ஒளிராமல் இருப்பதனால் அவ்வீதி இருளில் மூழ்கிக் காணப்படுவதுடன் போக்குவரத்துக்களும் அபாயத்தின் மத்தியில் இடம்பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வலி.தெற்கு பிரதேச சபையால் இம்மாதம் முற்பகுதியில் இவ் வீதிகளுக்கான மின்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளியூட்டப்பட்ட நிலையில் தற்போது இவை ஒளிராமல் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. இதனால் இவ்வீதியூடாக இரவு வேளைகளில் பயணத்தை மேற்கொள்வோர் விபத்துக்களை எதிர்நோக்கும் அபாயநிலை காணப்படுவதாக தெரிவிக்கும் மக்கள் சில சந்தர்ப்பங்களில் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இருளில் மூழ்கிக் காணப்படும் இவ்வீதியை ஒளிரச்செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (148)

## வவுனியா – சாஸ்திரிகூழாங்குளத்தில் இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம்

(வவுனியா)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சின் அனுசரணையுடன் இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம் நேற்று முன்தினம் வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் கிராமத்தில் இடம்பெற்றது.

மொனராகலையில் இருந்து வருகைதந்த 50 இளைஞர், யுவதிகள் வவுனியா - புதுக்குளம் மற்றும் சாஸ்திரிகூழாங்குளத்தைச் சேர்ந்த 50 இளைஞர் யுவதிகளுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டத்தில் ஈடுபடவுள்ளனர். அன்றைய தினம் காலை மொனராகலையில் இருந்து வருகைதந்த இவ்இளைஞர் யுவதிகள் புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் முன்னறில் இருந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரனுடன் அழைத்துச் செல்லப்பட்டனர். அதனை அடுத்து சாஸ்திரிகூழாங்குளம் செந்தூரன் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற விசேட வைபவத்திலும் கலந்து கொண்டிருந்தனர். எதிர்வரும் 28 ஆம் திகதி வரை வவுனியாவில் தங்கியிருக்கும் இவ் இளைஞர், யுவதிகள் இக்கிராமங்களில் சிரமதானப்பணிகள் மற்றும் கல்விச்சுற்றுலாவிலும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் முல்லைத தீவுக்கான சுற்றுலாவொன்றினையும் மேற்கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (125)

## கோழி நோய்களுக்கு தடுப்பு மருந்து வழங்கல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்நடை வளர்ப்போர் அலுவலகத்தினரால் கோழிகளின் நோய்களுக்கான தடுப்பு மருந்து மற்றும் தடுப்பூசி என்பன வழங்கப்பட்டு வருகின்றது.

கோழிகளுக்கு ஏற்படும் கோழிக் கொள்ளை, கம்போறா போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரையும் விடுமுறைகள் உட்பட பிரதி சனிக்கிழமைகள் தோறும அலுவலகத்தில் வழங்கப்படுகின்றது.

மேற்படி மருந்துக்கென சிறிய நிறமுள்ள போத்தல் கொண்டு வந்து பெற்றுக்கொள்ள முடியும். இச் சொட்டு மருந்து திணைக்களத்தின் மருந்து கையிருப்பில் இருக்கும் வரையில் இலவசமாகவும், இல்லாதவிடத்து சிறியதொகைப் பணத்தில் கால் நடை கூட்டுறவுச் சங்கத்தினால் தடுப்பு மருந்து வழங்கப்படுகின்றது.

இத்துடன் கோழிகளுக்கு ஏற்படும் அம்மை நோய்க்கான தடுப்பூசிகளும் தினமும் காலை 8 மணிமுதல் 9 மணிவரையும் அலுவலகத்தில் வைத்து பண்ணையாளர்களுக்கு தகவல் வழங்கு மிடத்து சென்று ஊசிபோடப்படும் எனவும், மேற்படி கோழிக்கொள்ளை மற்றும் கம்போறா நோய்கள் கூடுதலாக மழைகாலத்தில் ஏற்படும் நோய். இதற்கான முன்நோய் தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்படுகின்றது. வெய்யில் காலத்தில் கோழிகளுக்கு அம்மை நோய் ஏற்படும் என எச்சரிக்கை உண்டு. இதற் காகத்தான் தடுப்பு ஊசி ஏற்றப்படுகின்றது. எனவே இக்கொடிய நோய்களிலிருந்து கோழிகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் யூலியானா தெரிவித்துள்ளார். (116)

# மக்களின் வளமான வாழ்வை முன்னிறுத்தி எமது அரசியல் பயணம் அமையும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

மக்களின் வளமான ஒளிமய மான வாழ்வை முன்னிறுத்திய தாகவே எமது அரசியல் பய ணம் அமைந்துள்ளது. இதைவிடு த்து சுயலாபத்தைக் கொண்ட தல்ல என ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சியின் செயலாளர் நாய கமும் பாரம்பரிய கைத்தொழி ல்கள் மற்றும் சிறுதொழில் முய ற்சி அபிவிருத்தி அமைச்சரு மான டக்ளஸ் தேவானந்தா அவர் கள் உறுதிபடத் தெரிவித்தார்.

கோண்டாவில் கிழக்கு சிறீ நாராயணா சனசமூக நிலையத் தின் வைரவிழா மற்றும் சித்தி ரைப் புத்தாண்டையொட்டி நடாத் தப்பட்ட விளையாட்டுப் போட் டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசளிக்கும் நிகழ்வில் கடந்த சனிக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், எமது மக்கள் அரசியல் உரிமைகளைப் பெற்று வளமான ஒளிமயமான வாழ்வை வாழ வேண் டும் என்பதே எமது விருப்பமா கும்.

எதிர்காலங்களில் மக்களு டன் நின்று அவர்களுக்காகப் பணிபுரிபவர்களை தெரிவு செய் வதனூடாகவே உங்களது வாழ்வு மென்மேலும் வளம் பெறும்.

இங்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் இங் குள்ள பட்டதாரிகள் ஒரு தொகு தியினருக்கு முன்னுரிமை அடிப் படையில் வேலைவாய்ப்பு பெற் றுத் தருவதற்கு நடவடிக்கை



எடுக்கப்படும் அதேவேளை, சிறீ நாராயணா ஆலயப் புனரமை ப்புக்கு நிதியுதவி ஏற்கனவே கட்சி நிதியிலிருந்து வழங்கி யுள்ள போதிலும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படுமெ னத் தெரிவித்தார்.

தொடர்ந்து சித்திரைப் புத் தாண்டு மற்றும் வைர விழா வையொட்டி நடாத்தப்பட்ட பல் வேறு விளையாட்டுப் போட்டிக ளில் சாதித்த வீர வீராங்கனை களுக்கான பரிசில்களையும் அமைச்சர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கம லேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாள ரும், நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான அரவிந்திரதாசன் உட்பட பெருந் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### 250 ரவைகளுடன் நெடுங்கேணியில் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெடுங் கேணி பகுதியில் பெருந்தொகை துப்பாக்கி ரவைகளை தன்வசம் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ரி-56 ரகத் துப் பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் இரண்டாயிரத்து 250 ரவைகள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலை யத்தின் தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட குழு வினர் சந்தேகநபரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வரு கின்றனர்.

## கொக்கிளாய் கடற்பரப்பில் டையனமற் மீன்பிடி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-கரைதுறைப் பற்று பிரதேசசெயலர் பிரிவிலு ள்ள கொக்கிளாய் கிராமத்தின் கடற்பரப்பில் டையனமற் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதால் இப் பகுதி மீனவர்கள் பாதிக்கப்படு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத் தின் புல்மோட்டை மீனவர்களே இந்நடவடிக்கையில் ஈடுபட்டுவரு வதாகவும் இதனால் மீன்வளம் பாதிக்கப்படுவதுடன் மீனவர்க ளின் வாழ்வாதாரமும் பாதிக்கப் படுவதாக சுட்டிக்காட்டப்படுகி றது. இதேவேளை முன்னர் இச் செயற்பாடுகள் இடம்பெற்று வந்த நிலையில் சம்பந்தப்பட்ட வர்களிடம் தெரியப்படுத்தி நிறுத் தப்பட்டிருந்தது. எனினும் தற் போது மீண்டும் இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் வாழ்வாதாரத் தைக்கருத்திற் கொண்டு சம்ப ந்தப்பட்டவர்கள் இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மீனவர் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## ஆலயச் சூழலில் மது விற்பனை

(நெல்லியடி)

பருத்தித்துறை - மெத்தைக் கடை சந்தியில் குறிப்பாக சிவன் கோவிலுக்கு அருகில் நாளாந்தம் இடம்பெறும் மது விற்பனையால் அப்பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவிப்ப தாகத் தெரிவிக்கப்படுகிறது. இம்மது விற்பனை நடவடிக்கையால் மதுப்பிரியர்கள் மதுவை அருந்திவிட்டு தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகின்றனர்.

## குமுழமுனையில் மண் அகழ்வு; வளம் பாதிக்கும் அபாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செய லர் பிரிவிலுள்ள குமுழமுனை கிராமத்தில் தொடர்ச்சியாக மண அகழ்வு இடம்பெற்று வருவ தால் இக்கிராமத்தின் வளம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட் டுள்ளதாக மக்கள் அச்சம் தெரி விக்கின்றனர்.

இக்கிராமத்தில் 2 வருடங்க ளாக மண் அகழ்வு நடவடிக் கைகள் இடம்பெற்று வருவது டன் இம்மண் வேறு பிரதேசங்க ளுக்கும் பிற மாவட்டங்களுக் கும் எடுத்துச்செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்தில் வீட்டுத்திட டம வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படாமல் இருக்கும் நிலையில், இங்குள்ள மண் வேறுபிரதேசங்களுக்கு எடுத்துச்செல்லப்படுவது கவலை யளிப்பதாக மக்கள் தெரிவிக் கின்றனர்.

300 ஏக்கர் பரப்பளவில் இது வரை மண்அகழ்வு இடம்பெற்று ள்ளதுடன் தொடர்ச்சியாக இவ் விடத்திலே மண்அகழ்வு இடம் பெற்றுவருகிறது. இக்கிராமத் தின் வளத்தைப்பாதுகாக்க யார் முன்வருவார்கள் என இக்கிராம மக்கள் ஆதங்கத்துடன் தெரி விக்கின்றனர். (04)

## கனகராயன் குளத்தில் திவிநெகும பயிற்சி நிலையம்

(கனகராயன்குளம்)




முதலாவது திவி நெகும பயிற்சி நிலை யம் கனகராயன்குள த்தில் திறந்து வைக கப்பட்டது.

வடமாகாணத்தி ற்கான இந்திய நாடா ளுமன்றக் குழுவின் விஜயத்தின்போது அக்குழுவிற்குத் தலை மை தாங்கி வந்த இந்திய நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ரீமதி சுஷ்மா சுவராஜ் மற்றும் இலங்கை பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரி னால் கடந்த 18ஆம் திகதி திற ந்துவைக்கப்பட்டது.

இப்பயிற்சி நிலையமானது விவசாய நடவடிக்கைகள், கால் நடை வளர்ப்பு மற்றும் விதை உற்பத்தி ஆகியவற்றில் ஈடு படும் உள்ளூர் வாசிகளுக்குப் பயிற்சிளை வழங்குவதற்குப் பயன்படவுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த் தக அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந் திரசிறி, வவுனியா மாவட்ட ஆணையாளர் ஐ.எம்.எஸ். மொகைதீன் மற்றும் உயர் அதி காரிகள் இதில் கலந்துகொண் டார்கள்.

## அடிப்படை வசதிகளின்றி காதலியாறு - சம்மளங்குளம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட காதலியாறு-சம் மளங்குளம் கிராம மக்கள் அடிப் படை வசதிகளின்றி வாழ்வாதார ரீதியில் பாதிக்கப்படுவதாகத் தெரி விக்கின்றனர்.

இக்கிராமத்தில் 350 குடும்ப ங்கள் மீள்குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் தமக்கு எவ்வித வச திகளும் கிடைக்கவில்லை என அவர்கள் ஆதங்கத்துடன் தெரி விக்கின்றனர்.

மின்சாரம் வீட்டுத்திட்டம், உள் ளூர் வீதிகள் புனரமைப்பு உள் ளிட்ட வசதிகள் இதுவரை ஏற் படுத்தப்படவில்லை. இதைவிட பொதுவிளையாட்டு மைதானம் அபிவிருத்திக்கு உட்படாமல் பற்றைக்காடாகக் காட்சியளிப்ப தாகவும், நிரந்தரக் கட்டடமின்றி முன்பள்ளி இயங்கி வருவதாக வும் குறிப்பாக இந்து ஆலயங் களும் புனரமைப்புக்கு உட்படா மல் காணப்படுவதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இக்கிராமத்தின் அபிவிருத்தியையும் முன்னெடு க்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்ற னர். (04)

### மின்னல் தாக்கியவர் கிளிநொச்சி மருத்துவமனையில்


(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலை யில் கிளிநொச்சி பொது மரு த்துவமனையில் சிகிச்சைக ளுக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார் எனத் தெரியவருகின்றது.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக் கிழமை பிற் பகல் 2 மணியளவில் கிளி நொச்சி-பன்னங் கண்டிப்பகுதி யில் இடம்பெற்றுள்ளது. இதில் பன்னங்கண்டியைச் சேர்ந்த குருகுலராஜா முகுந்தன் (வயது -16) என்பவரே படுகாயமடைந்த வராவார்.

மழை நேரம் இளைஞர் கள் கூட்டமாக விளையாடிக் கொண்டிருந்த போதே இச்சம் பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கடுமையாக காதுப் பகுதியில் காயமடை ந்த நிலையில் உடனடியாக கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டு தொடர்ந் தும் சிகிச்சை பெற்று வருகின் றார்.





வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கான பணிநயப்பு விழா வில் முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சிவசக்தி, கணக்காளராக பதவி உயர்வு பெற்ற திருமதி இந்துமதி சிவநேசனுக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (06)

# பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சுய சக்தியூட்டல் அவசியம்

(யாழ்ப்பாணம்)

சுய விழிப்புணர்வு மற்றும் சுய சக்தியூட்டல் மூலமாகவே நாம் எமது அனைத்துப்பிரச்சினைகளையும் ஓர் முடிவுக்கு கொண்டு வரமுடியும். இதற்கு ஆன்மீகம் ஒன்றே ஒரே வழியாகும் என யு.ஆர் பிறண்ட் பவுண்டேசன் நிறுவன ஊடகச் செயலாளர் ரெ.துவாரகன் தெரிவித்தார்.

வேலைக்குச் செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் 10ஆவது சர்வதேச மகளிர் தினம் யாழ்.மாவட்ட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீக பல்கலைக்கழகத்தின் தலைமையகத்திற்கு அண்மையில் விஜயம் செய்துள்ளேன். அப் பல்கலைக்கழகமானது 130 இற்கும் அதிகமான நாடுகளில் 8500 இற்கு மேற்பட்ட நிலையங்களினைக் கொண்டு இயங்குவதோடு, ஐ.நா சபையுடன் இணைந்து பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.



இப் பல்கலைக்கழகத்தின் சேவை எமது சமூகத்திற்கு அவசியம் தேவை எனக் கருதுவதினால் இவ் ஆன்மீகப் பல்கலைக்கழகத்தின் இலங்கை தலைமை நிலையத்திற்கு பொறுப்பான ஆன்மீக சகோதரருடனும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவுடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் அதன் பிற்பாடு அத்திட்டங்கள் பற்றி யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களுக்கு தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# 'குடிமகனுக்கு' அபராதம்

(திருநெல்வேலி)

மதுபோதையில் வீதியில் குழப்பம் விளைவித்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் 2 ஆயிரம் ரூபா அரச செலவாகச் செலுத்தும்படி உத்தரவிட்டுள்ளது.

இவர் ஒரு அரச உத்தியோகத்தராவார். குடித்துவிட்டு குடிபோதையில் வீதியில் சென்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியதாக இவர் மீது யாழ்ப்பாணம் பொலிஸாரினால் குற்றம் சாட்டப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதினாலும், அரச உத்தியோகத்தராக இருந்தமையினாலும் இவரை அரச செலவாக 2 ஆயிரம் ரூபா செலுத்தும்படி நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். (137)

# வசதிகளற்ற நிலையில் தண்ணீரூற்று பாடசாலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கற்றலுக்கான வசதிகளற்ற நிலையில் இயங்கிவருவதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

தரம் 1முதல் 5வரை வகுப்புக்களில் 80 மாணவர்களுடன் இயங்கிவரும் இப்பாடசாலையில் விளையாட்டு மைதானம் நூலகம் மற்றும் மலசலகூடவசதிகள் என்பன இல்லாமல் உள்ளன.

இதனால் மாணவர்களின் கற்றல் விளையாட்டு செயற்பாடுகள் என்பன முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பெற்றோர் கடந்த யுத்த அனர்த்தங்களினால் மலசலகூடங்களும் பழுதடைந்த நிலையில் பயன்படுத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர். மாணவர்களின் கற்றல்செயற்பாடுகளை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் இப்பாடசாலைக்கான தேவைகளைப் பெற்றுத் தருமாறு மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# வர்த்தகரை அச்சுறுத்தியவர்கள் பிணையில் செல்ல அனுமதி

(திருநெல்வேலி)

கொழும்பைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை பிஸ்டல் போன்ற ஏதோ ஒன்றைக் காட்டி பயமுறுத்தியதாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சகோதர வர்த்தகர்கள் யாழ்.நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு கடந்த வெள்ளிக் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவர்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என இவர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வாதாடினர். இதற்கு முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதவான், சந்தேக நபர்கள் இருவரையும் தலா 3 இலட்சம் ரூபாவுக்கான இரண்டு அரச உத்தியோகத்தர்களின் ஆட்பிணையிலும், 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்வதற்கு அனுமதித்தார். இருவரது கடவுச் சீட்டுக்களும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காலை 9.00 மணிக்கும், நண்பகல் 12.00 மணிக்குமிடையில் நீதிமன்றப்பதிவாளர் அறையில் கையெழுத்திட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

பாலசிங்கம் சிவசுப்பிரமணியம், பாலசிங்கம் சிவஞானம் ஆகிய சகோதரர்களே பிணையில் விடுவிக்கப்பட்டவர்களாவர். (137)

# கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(வடமராட்சி)

வடமராட்சி வலயத்தில் விரைவில் வெற்றிடமாகவுள்ள பருத்தித்துறை கோட்டத்திற்கு பொறுப்பான கடமை நிறைவேற்றும் கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

இதற்குரிய நிபந்தனைகளாக இலங்கை அதிபர் சேவை தரம் 1 அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 ஐச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 3 வருடங்களேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை தரம் - 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2:1ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேராகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (116)

# கிளிநொச்சியில் கன மழை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை காற்றுடன் கூடிய கனமழை பெய்ததால் மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பாதிக்கப்பட் டுள்ளது.

காலை ஆரம்பமாகிய மழை தொடர்ச்சியாக 2 மணித்தியாலங்கள் விடாது காற்றுடன் பெய்தது. இதனால் வீதிகளில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதுடன் வாகனப்போக்குவரத்துக்களும் சிரமத்துடனேயே இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)

# 480 முன்னாள் போராளிகளுக்கு முல்லைத்தீவில் கடனுதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னாள் போராளிகளுக்கான கடன்வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை முலலைத்தீவு மாவட்ட செயலகத்தில இந்நிகழ்வு நடைபெற்றது.

480 முன்னாள் போராளிகளுக்கு அவர்களின் சுயதொழிலுக்கு ஏற்றவகையில் 50ஆயிரம் ரூபா முதல் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவரை கடன் வழங்கப்படவுள்ளது.

இவர்களிடம் நேர்முகப்பரீட்சையின்மூலம் தொழில்வாய்ப்புக்களைக் கேட்டறிந்து கடன் வழங்கப்படவுள்ளதுடன் இக்கடன அரச வங்கிகளுடாகவே பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடனை ஒருவருடத்திற்கு மீளச் செலுத்தத் தேவையில்லை எனவும் ஒரு வருடத்தின் பின் அடுத்த வருடத் திலிருந்து 10 வருடங்களில் கடனை மீளச்செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டம் வாழ்வாதாரத்தை உயர்த்த பெரும் உதவியாகக் காணப்படும் எனவும் முன்னாள் போராளிகள் இதனைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் வழிகாட்டலின் கீழ் அமைச்சரவையின் ஒப்புதலுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் வகையில் சுயதொழிலை மேற்கொள்வதற்காக இக்கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(வடமராட்சி)

வடமராட்சி வலயத்தில் விரைவில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யா/விக்னேஸ்வரா கல்லூரி தரம்- 1AB பாடசாலை,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி தரம் -1AB பாடசாலை

விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும், இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2:1ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும். பயிற்றப்பட்ட பட்டதாரிகளாக அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரிகளாக அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பத்தரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியி லிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்களேனும் சேவை யாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டவராக இருத்தல் வேண்டும். அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் மூன்றுவருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்றியிருக்க வேண்டும். இலங்கை அதிபர் சேவை வகுப்பு/தரம் என்பவற்றின் வரிசைப்படி முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த பொருத்தமானவர்களது விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவங்களை வலயக்கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (116)

# முரசின் இன்றைய பலன்

(24.04.2012 – செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 12 ஆம் திகதி. திருதியை முன்னிரவு 7.11 வரை.
நட்சத்திரம் ரோகினி முழுவதும். அமிர்தயோகம், அட்சய திருதியை.
இராகுகாலம் 3.00 - 4.30 வரை. சுபநேரம் 10.30 - 12.00 வரை.
எமகண்டம் 9.00 - 10.30 வரை. குளிகைகாலம் 12.00 - 1.30 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பொருள் விருத்தி, குடும்பத்தில் தன்னிறைவு, சகோதரரால் உதவி, செலவு அதிகரிப்பு. |
| ரிஷபம் | புத்தி மேன்மை, எதிர்பாராத தனவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, இடமாற்றம் வரும். |
| மிதுனம் | நன்மைகள் கிட்டும், குடும்பத்தில் சஞ்சலம், சொத்துக்களால் சிக்கல், அலைச்சல். |
| கடகம் | கூட்டு முயற்சி, செலவுகளால் சங்கடம், வெற்றிதரும் பிரயாணங்கள், அந்நியர் உதவி. |
| சிம்மம் | முயற்சி பலிதம், புதுப்புது வாய்ப்புக்கள், சுபகாரிய வெற்றி, தடைப்பட்டது கைகூடும். |
| கன்னி | சுபநாள், சஞ்சலமும் நிம்மதிக்குறைவும், உடல் ஆரோக்கியம் நன்று, குடும்ப ஒற்றுமை. |
| துலாம் | முன்தினம் போல் கவனம் தேவை, ஆடம்பரச் செலவை குறைக்கவும், அரச சலுகை உண்டு. |
| விருச்சிகம் | சந்திப்பு, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, சிந்தித்து செயறபடு, குடும்பத்தில் ஒற்றுமை குறைவு. |
| தனுசு | நற்சிந்தனை, உறவினர் அனுகூலம், சோர்வு நீங்கி சுறுசுறுப்பு, கடன் வரவுகள், |
| மகரம் | தடை தாமதம், மனதில் உற்சாகம், அதிகாரிகளை அனுசரிக்கவும், நற்செய்தி வரும். |
| கும்பம் | அதிகாரிகளால் தொல்லை, குடும்ப சுகம் திருப்தி, ஆபரணச்சேர்க்கை, உடல் நலம் நன்று. |
| மீனம் | நன்மைகள்சேரும், உழைப்பு விழலுக்கு இறைத்த நீராகும், பயணம் தவிர்க்கவும், கலகம் வரும். |

# ஒலிம்பிக் போட்டிக்குப் பின் ஓய்வு

டென்மார்க்கின் முன்னணி பட்மின்ரன் வீரர் பீட்டர் காடே ஒலிம்பிக் போட்டி முடிந்ததும் ஓய்வுபெறத் திட்டமிட்டுள்ளார். 16 கிராண்ட்ப்ரீ போட்டிகளில் பட்டம் வென்றவரான பீட்டர் காடேவுக்கு இப்போது 35 வயது.

இது குறித்து அவர் குறிப்பிட்டுள்ளதாவது; ஒலிம்பிக்கிற்குப் பிறகு பட்மிண்ரன் போட்டியிலிருந்து ஓய்வுபெற விரும்புகிறேன். நான் ஓய்வுபெற இப்போது சரியான தருணம் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

எனது ஆட்டம் நல்ல நிலையில் இருக்கும்போதே ஓய்வுபெற்றுவிட வேண்டும் என்று விரும்புகிறேன். இப்போது எனது உடலும், மனதும் நான் விளையாடுவதை நிறுத்தும்படி கூறிவிட்டன. அதையெல்லாம்விட முக்கியம் எனது குழந்தைகளோடு நேரத்தைச் செலவிட விரும்புகிறேன். கணுக்கால் காயம் காரணமாக இந்த முறை இந்திய ஓபன் சூப்பர் சீரிஸ் போட்டியில் விளையாடும் திட்டமில்லை. கடைசிக் கட்டத்தில்தான் பங்கேற்க முடிவு செய்தேன் என்றார்.

# ஆட்டம் குறையவில்லை

(கரிபியன்)

எனது ஆட்டத் திறன் குறைந்துவிட்டதாக நான் உணரவில்லை. தற்போதும் நல்ல நிலையிலேயே உள்ளதாகவே உணர்கின்றேன் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.



எனது ஆட்டத் திறன் குறித்து திருப்தியடைகின்றேன். நான் சிறப்பாக விளையாடுவதாகவே உணர்கின்றேன்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஏதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் நான் மிகச் சிறப்பாக விளையாடினேன். எதிர்பார்த்தளவு ஓட்டங்களைப் பெறாமை கவலையானது. அத்தோடு மிகப் பெரிய ஓட்டமொன்று மிக விரைவாகக் கிடைக்க பெறும். மேற்கிந்தியத்தீவு அணிக்திரான முதல் டெஸ்ட் போட்டியில் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தமை கவலைதான். இருப்பினும் கிரிக்கெட்டில் இது சகஜம். இது எனக்கு மாத்திரமின்றி அனைவருக்கும் ஏற்படும் ஒன்றே. அடுத்து வரும் போட்டிகளில் நிச்சயம் அதிக ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வெற்றி

(கொல்கத்தா)

இந்தியன் பிறிமியர் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் டெக்கன் சார்ஜஸ் அணிக்கெதிரான போட்டி ஒன்றில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஐந்து விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கன் சார்ஜஸ் அணி 20 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஷிக்கர் தவான் 50 ஓட்டங்களைப் பெற்றதுடன், பார்தீவ் பட்டேல் 23 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் சுனில் நரீன் மற்றும் லக்ஷ்மிபதி பாலாஜி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 19 ஓவரில் ஐந்து விக் கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை எட்டியது. இதில் மனோஜ் திவாரி ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களைப் பெற்றதுடன், கௌதம் கம்பீர் 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் டேல் ஸ்டெய்ன் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று அடுத்து சுற்றுக்கு நுழைவதே எமது இலக்கு. இதற்கான தகுதி எம்மிடம் நிறைவே இருக்கின்றது என வெற்றியின் பின் கொல்காத்தா அணிக் கப்டன் கௌதம் கம்பீர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைச்சாத்திட மறுக்கும் மலிங்க

(கொழும்பு)

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க, இலங்கை கிரிக்கெட் சபை வழங்கிய ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துள்ளார். லசித் மலிங்க தவிர, ஏனைய 92 வீரர்கள் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த 92 வீரர்களில் 22 வீரர்கள் தேசிய ஒப்பந்தத்திலும் ஏனையவர்கள் மாகாண மற்றும் 'ஏ' அணிக்கான ஒப்பந்தத்திலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

வெளியாகியுள்ள தகவல்களின் அடிப்படையில் லசித் மலிங்கவிற்கு வருடமொன்றிற்கு 100,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் உயர் நிலை ஒப்பந்தம் அளிக்கப்பட்டது.

எனினும் அவர் இலங்கை சார்பா[illegible] டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றா[illegible] நிலையில் அதன் 40 சதவீதத்தையே அவர் ஒப்பந்தமாகப் பெறுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கிரிக்கெட் சபை வழங்கிய ஒப்பந்தத்தில் திருப்தியடையாத லசித் மலிங்க அவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துள்ளார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, லசித்மலிங்கவிடம் தேசிய ஒப்பந்தம் இல்லாதபோதிலும் இலங்கை சார்பாக தேசி யப் போட்டிகளில் பங்குபற்றிவரும் வீரர்களை பேணிப்பாதுகாப்பது இலங்கைக் கிரிக்கெட் சபையின் கடமை. அந்தக் கடமையை இலங்கை கிரிக்கெட் சபை சரிவரச் செய்து வருகின்றது எனத் தெரிவித்தார்.

# நடால் சம்பியன்



(மான்டி கார்லோ)

மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் ரபெல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

ஏ.டி.பி. அந்தஸ்து பெற்ற மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டி பிரான்சின் மான்டி கார்லோ நகரில் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில், உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் ரபெல் நடால் மோதினர்.

களிமண் ஆடுகளத்தில் ஆதிக்கம் செலுத்தக்கூடியவரான நடாலை இம்முறை முதல்நிலை வீரரானகோகோவிச் வீழ்த்துவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், நடாலின் அதிரடி ஆட்டத்துக்கு ஜோகோவிச்சால் ஈடு கொடுக்க முடியவில்லை. நடால் 6,3, 6,1 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று சம்பியன் கோப்பை வென்றார். இத்தொடரில் நடால் வெல்லும் 8ஆவது சம்பியன் கோப்பை இது. மேலும், இவர் வெல்லும் 47ஆவது ஏ.டி.பி. சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திரஜித் குரே ஒலிம்பிக்கிற்கு தகுதி

(கொழும்பு)

2012 லண்டன் ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்கேற்கும் வாய்ப்பினை இலங்கை மரதன் ஓட்ட வீரரான அனுராத இந்திரஜித் குரே பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற லண்டன் மரதன் ஓட்டத்தின் போட்டித் தூரத்தை இரண்டு மணித்தியாலங்கள் 17 நிமிடங்கள் 50 செக்கன்களில் அனுராத குரே பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெறுவதற்கான நேரத்தினை விட, 10 செக்கன்கள் குறைவாக அனுராத குரே போட்டித் தூரத்தை நிறைவுசெய்துள்ளார்.

இந்நிலையில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டாவது முறையாக ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் அதில் சாதித்துக் காட்ட வேண்டும் என்பதை இலக்காக உள்ளதாகவும் அனுராத குரே குறிப்பிட்டார்.

# டோனியிடம் கற்கலாம்

(சென்னை)

நெருக்கடியான தருணங்களை எப்படிச் சமாளிப்பது என்பதை கப்டன் டோனியிடம் இருந்து கற்றுக் கொள்ள முடிகிறது என சென்னை அணியின் சகலதுறை வீரர் பிராவோ தெரிவித்தார்.

எவ்வளவு நெருக்கடி இருந்தாலும் அவர் ரொம்பவும் நிதானமாக செயற்பட்டு சமாளிக்கிறார். அவரைப் போலவே நானும் இனி நிதானமாகச் சமாளிக்க முயற்சி செய்வேன். அவருடன் இணைந்து துடுப்பாட்டம் செய்ததை எனது வாழ்நாளின் முக்கிய நிகழ்வாக கருகிறேன் என்றார்.

# கங்குலி மகிழ்ச்சி

டில்லி அணியை வீழ்த்தியது மகிழ்ச்சி. முதல் நான்கு இடங்களுக்குள் வருவதே எமது இலக்கு என புனே அணியின் கப்டன் கங்குலி தெரிவித்தார். சேவாக் அதிரடியாக விளையாடிக் கொண்டிருந்தார்.



அவரது விக்கெட் தான் ஆட்டத்தின் திருப்புமுனையாகும். அதன் பிறகு தான் ஆட்டம் எங்கள் பக்கம் திரும்பியது.

இதே போல் அதிரடியாக ஓட்டங்கள் குவித்த கெவின் பீட்டர்சனின் விக்கெட்டை வீழ்த்திய போது மிகப்பெரிய நிம்மதி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியில்தான் மைதானத்தில் அவ்வாறு ஓடினேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# உலக சம்பியன்



பஹறைன் கிராண்ட் ஃபிறிக்ஸ் ஓட்டப் பந்தயத்தில் உலகச் சம்பியனான செபஸ்டியன் விட்டல், சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இது இந்தாண்டில்அவர் பெற்றுக் கொள்ளும் முதலாவது சம்பியன் பட்டம் ஆகும்.

24 வயதான ஜேர்மனியைச் சேர்ந்தவரான செபஸ்டியன் விட்டல், பெரியளவிலான போட்டிகளின்றி சம்பியன் பட்டத்தை வெற்றிகொண்டார். தவறுகளைப் பெரிதளவில் மேற்கொள்ளாமல் மிகச்சிறப்பாக வாகனத்தைச் செலுத்திய அவர், தனது 22ஆவது வெற்றியைப் பதிவுசெய்து கொண்டார்.

செபஸ்டியன் விட்டல், 2007ஆம் ஆண்டின் சம்பியன் கிமி ராய்க்கொனென் மற்றும் ரொமெய்ன் குரொஸ்ஜென் ஆகியோரை முந்தி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

போட்டி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த செபஸ்டியன் விட்டல், அற்புதமான ஓட்டமாக அமைந்ததாகத் தெரிவித்தோடு, மிகவும் கடினமான ஓட்டமாகவும் அமைந்ததாகத் தெரிவித்தார். சிறந்த ஆரம்பமொன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமானது எனத் தெரிவித்த அவர், போட்டியில் சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை அதிர்ஷ்டகரமானது எனத் தெரிவித்தார். சிறந்த ஆரம்பம் காரணமாக போட்டியை வெல்லக்கூடியதாக அமைந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

# பங்களாதேஷ் கிரிக்கெட் சபை முன்மொழிவு

(டாக்கா)

தென்னாபிரிக்க அணியுடனான கிரிக்கெட் தொடரில் பங்குபற்றுவது தொடர்பான முன்மொழிவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை சமர்ப்பித்துள்ளது.


பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தலைவர் முஸ்தபா காமல் அனுப்பியுள்ள இந்த கோரிக்கை குறித்து ஆலோசித்து வருவதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

இந்தத் தொடருக்கான சாத்தியங்கள் குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்களின் சங்கம் மற்றும் பயிற்றுவிப்பாளர் கெரி கேஸ்டன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் பதில் நிறைவேற்றுப் அதிகாரி கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவின் போட்டி அட்டவணையின் பிரகாரமே இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கான சுற்றுலா அமைந்தால் மகிழ்ச்சி என்றும், பெரிய நாட்டு அணிகளுடன் போட்டிகளில் பங்குகொள்ளும் போது எப்பொழுதும் சவாலானதாக இருக்கும் என்றும், அந்தச் சவால்களை எதிர்கொள்ளும் பட்சத்திலேயே நல்ல வீரர்கள் என்ற அடையாளத்தை வெளிப்படுத்துக் கூடிய சந்தர்ப்பங்களாக அமையும் எனவும் பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான இக்பால் தெரிவித்தார்.

# தேசிய மட்டத்தில் தந்தை, மகன் தங்கம்



தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கராத்தேப் போட்டியில் தந்தை, மகனாகிய விஜயராஜ் மற்றும் நிவேதன் ஆகியோர் தங்கம் வென்றனர்.

இப்போட்டி கொழும்பு மஹரகம உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

தேசிய அளவில் 1000இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த சி. விஜயராஜ் கறுப்புப் பட்டி 80 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான சண்டைப் போட்டியில் தங்கம் வென்றதுடன் அதே பிரிவினருக்கான காட்டாப் போட்டியில் முதல் எட்டு வீரர்களுக்குள் ஒருவராகத் தெரிவானார்.

மற்றும் 9 வயதுப் பிரிவுக்கான காட்டாப் போட்டியில் வி. நிவேதன் தங்கம் வென்றதுடன் அதே வயதுப் பிரிவிருக்கான சண்டைப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

யாழ். மத்திய கல்லூரி மாணவனான இவர், 1990ஆம் ஆண்டு தனது 18ஆவது வயதில் சென்சே மோகனிடம் கராத்தே கலையை பயின்றதுடன் கறுப்புப் பட்டி வரை அவரிடம் கற்றிருந்தார். மேலதிக பயிற்சியை சென்சே றேமன் அவர்களிடமும், கறுப்புப் பட்டி 3 வரை தரம் உயர்த்தப்பட்டார். அத்தோடு சிகான் பொனி றோபேடிடம் பயிற்சி பெற்று கறுப்புப் பட்டி 5இற்கு தரம் உயர்த்தப்பட்டார். சிகான் பொனி றொபேட் மறைவிற்குப் பின்னர் சிகான் இராமச்சந்திரனிடம் தனது பயிற்சியைத் தொடர்ந்து அவரிற்கூடாகவே தேசிய ரீதியில் சிகான் சசாக்கியிடம் கடந்த 2009ஆம் ஆண்டு கறுப்புப் பட்டி இரண்டையும் (ஜப்பான்), இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கறுப்புப் பட்டி மூன்றிற்கான பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்.

அத்தோடு பாடசாலை ரீதியில் கராத்தே பயிற்சி வழங்குவதற்கான அனுமதி அடையாள அட்டையையும் வைத்துள்ள இவர் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பெருமளவான வீரர்களை உருவாக்கியுள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த 2003ஆம் ஆண்டு எட்டு மாவட்டங்களிற்கான கராத்தே சுற்றுப் போட்டியில் தனது தனி மாணவர்களை வைத்து வெற்றிபெற வைத்ததோடு, கிளி. மாவட்ட மாணவர்களை மாவட்டம், மாகாணம், தேசியம் என்று முதன் முதலில் பங்கு கொள்ளச் செய்த பெருமையும் இவரையே சாரும்.

அத்துடன் கடந்த 2003, 2004ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாணத்திற்கான கராத்தே சுற்றுப் போட்டியில் குமித்தேயில் 3ஆம் இடம் பெற்றதோடு 2005ஆம் ஆண்டு இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொணடார். 2010ஆண்டு நடைபெற்ற தேசிய மட்ட கராத்தேப் போட்டியில் இவரது மாணவர்கள் 5 பதக்கங்களையும், 2011ஆம் ஆண்டு நடைபெற்ற கராத்தே சுற்றுப் போட்டியில் ஒரு பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

2011ஆம் ஆண்டு வடமாகாண காரத்தே போட்டியில் 87 பதக்கங்களை இவரது மாணவர்கள் பெற்றமைக்காக வடமாகாண கராத்தே சம்மேளனத்தினால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உடுவில் பிரதேச செயலகத்தில் முதலிடம் பிடித்தது ஸ்ரீமுருகன்



(சுன்னாகம்)

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் ஒட்டுமொத்தமாக 44 புள்ளிகளைப் பெற்ற ஸ்ரீமுருகன் அணி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் விளையாட்டுக்கள் கடந்த 15ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஒட்டுமொத்தமான புள்ளிகள் அடிப்படையில் 44 புள்ளிகளைப் பெற்று ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும், 41 புள்ளிகளைப் பெற்ற இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும், 31 புள்ளிகளைப் பெற்ற ஜனசக்தி விளையாட்டுக்கழகம் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இதேவேளை, அன்றைய தினம் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணி சம்பியனானது.

·இப்போட்டித் தொடரில் இறுதிப் போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின.

இதில் முதல் பாதி ஆட்டத்தில் ஒரு கோலையும், இரண்டாவது பாதி ஆட்டத்தில் மற்றுமொரு கோலையும் போட்ட ஞானமுருகன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியனானது.

இப்போட்டி நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், உடுவில் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச அமைப்பாளர் மித்திரன் உட்பட பலர் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குக் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (93)

# மாவட்ட மட்ட சம்பியனானது ஆவரங்கால் இந்து இளைஞர்




(யாழ்ப்பாணம்)

அரியாலை 95ஆவது சுதேசிய கொண்டாட்ட விழா மாவட்ட மட்டக் கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியனானது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 12ஆம் திகதி அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத் தில் நடைபெற்றது.

இதில் பல அணிகள் கலந்து கொண்டன. இருப்பினும் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே தமது திறமைகளை வெளிப்படுத்தி இரசிகர்களை பேரானந்தத்தில் ஆழ்த்தினர்.

ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் செட்டை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25-22 என்ற கணக்கிலும், இரண்டாவது செட்டை 25-23 என்ற செட் கணக்கிலும் கைப்பற்றியது. தொடர்ந்து மூன்றாவது செட் ஆட்டத்தில் வேகம் கொண்ட உடுப்பிட்டி நவஜீவன் அணி 25-21 என்ற செட் கணக்கில் கைப்பற்றி எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தது.

இந்நிலையில் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. மிக விறுவிறுப்பாக நடைபெற்ற நான்காவது செட்டை 25-21 என்ற செட் கணக்கில் கைப்பற்றி ஆவரங்கால் இந்து இளைஞர் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டி பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (93)

# மத்திய கல்லூரியில் இன்று மாவட்ட மட்ட மேசைப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டி இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள இப்போட்டி வயது அடிப்படையில் நடைபெறவுள்ளது.

இதில் 15, 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கிடையில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் ஹாட்லிக் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடர்களில் பங்குகொள்ளவுள்ள பாடசாலை அணிகளைக் குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட மட்ட பெண்கள் கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாவது இடத்தைப் பிடித்துக் கொண்ட கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியினர், பயிற்சியாளர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன் நிற்பதைக் காணலாம். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மாதகல் சென். ஜோசப் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (12)

# சபாஷ் சரியான போட்டி!

- குகன் நாதன் -

ஜெயலலிதாவின் ஆஸ்தான அரசியல் ஆலோசகரான துக்ளக் சோ, பொற்கோவிலுக்குள் இந்திரா காந்தி நடத்தியது போரா என்று கேட்டுக்கொண்டிருக்க, அவரது ஆலோசனையின் கீழ் செயற்படும் ஜெயலலிதா இலங்கை மீது பொருளாதாரத் தடையை வலியுறுத்தினார்.

**தமிழகத்தின்** தற்போதைய முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்களுக்கும் முன்னாள் முதல்வர் கலைஞர் முத்துவேலு கருணாநிதிக்கும் இடையே புதிய போட்டி ஒன்று ஆரம்பமாகியிருக்கின்றது.


உலகத் தலைவர்களின் தலைவர் யார் என்கிற போட்டியே அது.

உலகத் தமிழர்களின் தலைவராக நீண்டகாலமாக தன்னைத்தானே அறிவித்து அந்த "பதவிசுகத்தை" அனுபவித்து வந்தவர் கருணாநிதி. பிரபாகரன் உயிரோடு இருந்தபோது அவரது கவலையெல்லாம் எங்கே தனது அந்தத் தலைவர் என்ற பதவியை பறிகொடுக்கவேண்டி வந்துவிடுமோ என்பதுதான். பிரபாகரன் இல்லாமல் போனபின்னர் நிம்மதிப் பெருமூச்சு விட்ட கருணாநிதிக்கு புதிய போட்டியாக வந்து சேர்ந்திருக்கிறார் ஜெயலலிதா.

ஜெயலலிதாவிலும் பார்க்க தனக்கே தமிழ் மீது பற்று அதிகம் என்பதை நிரூபிப்பதற்காக அவர் இப்போது தினமும் ஒரு கட்டுரையை முரசொலியில் எழுதவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

ஜெயலலிதாவை தமிழரே இல்லை என்றும் அவர் ஒரு கன்னடக்காரி என்றும் ஒதுக்கிவிட தெலுங்கரான கருணாநிதியால் முடியவில்லை. அதனால்தான் தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்றுக்கொடுத்தேன், உலகத் தமிழ் மாநாடு நடத்தினேன் என்றெல்லாம் கணக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

உலகத் தமிழர்களின் தலைமையை பெறவேண்டும் என்றால் தமிழகத்திற்கு அப்பால் இருக்கும் தமிழர்களின் பிரச்சினைகளிலும் கவனம்செலுத்த வேண்டுமே. தமிழகத்திற்கு வெளியே என்றால்



உலகத் தமிழரகளாமி தலைமையைபெறவேண்டும் என்றால் தமிழகத்திற்கு அப்பால் இருக்கும் தமிழர் களின் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த வேண்டுமே. தமிழகத்திற்கு வெளியே என்றால் முதலில் தெரிவது ஈழத்தமிழர்தான். அதனால்தான் ஈழத்தமிழர் பிரச்சினையை கையில் எடுத்தார் கருணாநிதி.


முதலில் தெரிவது ஈழத்தமிழர்தான். அதனால்தான் ஈழத்தமிழர் பிரச்சினையை கையில் எடுத்தார் கருணாநிதி.

ஈழத்தில் யுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது கருணாநிதி நடத்திய போராட்டங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. ஆனாலும் இந்திய மத்திய அரசில் அங்கம் வகித்ததால் நடந்து முடிந்த அத்தனை சம்பவங்களுக்கும் அவரும் பங்காளியானார். இவையெல்லாம் பழைய கதைகள்.

ஆனால் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக்கழகம் படுதோல்வி அடைந்ததற்கு காரணம், ஈழத்தமிழர் விடயத்தில் காட்டிய அசமந்தமும் காங்கிரஸ் கட்சியுடனான கூட்டும் தான் என்று சீமான் போன்றவர்களும் புலம்பெயர் தமிழர்களும் கணக்குக் காட்டினார்கள்.

அதனால் விழித்துக்கொண்ட கருணாநிதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டுப் பார்த்தார். அதிலும் படுதோல்வியே. உள்ளூராட்சித் தேர்தல் என்றால் எப்போதும் ஆளும் கட்சிதான் வெற்றிபெறுவதுண்டு என்று மனதைத் தேற்றிக்கொண்டு அடுத்த தேர்தலுக்கு தயாராகிவிட்டார்.

அடுத்து வர விருப்பது இந்திய நாடாளுமன்றத்திற்கான தேர்தல். அதில் கணிசமான இடங்களைப் பெறாவிட்டால் கட்சி ஆட்டம் கண்டுவிடும். எப்படியாவது கணிசமான இடங்களைப் பெற்று அடுத்து மத்தியில் ஆட்சி அமைக்கும் கட்சியுடன் சேர்ந்தால்தான் அவரால் நிம்மதியாக போய்ச் சேரமுடியும். கட்சித் தலைமையை இளைய புத்திரருக்கு



கொடுக்க வேண்டுமானால், மூத்த புத்திரருக்கு மத்தியில் அமைச்சர் பதவியாவது வேண்டும். கருணாநிதியின் தற்போதைய பிரச்சினையெல்லாம் அதுதான். அடுத்த தேர்தலில் வெற்றிபெற என்ன என்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்யவேண்டிய கட்டாயம். ஈழத் தமிழர் விடயத்திலும் ஜெயலலிதா முந்திக்கொண்டு தனது அதிரடியை வெளிப்படுத்துவதால் கலங்கிப் போயிருக்கிறார் கருணாநிதி.

ஜெயலலிதாவின் தமிழ்உணர்வு பகிரங்கமானது. விடுதலைப் புலிகள் உயிரோடு இருந்தவரை அவருக்கு ஈழத்தமிழர் வேண்டத்தகாதவர்கள். புலிகள் அழிக்கப்பட்ட பின்னர், அதிலும் இந்திய மத்திய அரசின் கைகள் சம்பந்தப்பட்டதால் அந்த மத்திய அரசில் கருணாநிதி பங்காளி என்பதால் அந்த விவகாரத்தையும் கையிலெடுத்தார் ஜெயலலிதா.

உண்மையிலேயே ஈழப் போர் முடிந்த கையுடன் நடைபெற்ற தமிழக சட்டசபைத் தேர்தலில் தமிழீழ அனுதாபிகளின் வாக்குகள் தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் சக்தியாக இருக்கும் என்று ஜெயலலிதா நம்பியிருந்தால் அவர் வைகோவை தனது அணியிலிருந்து தூக்கி எறிந்திருக்க மாட்டார்.

தமிழீழ அனுதாபிகளின் ஒரு சில ஆயிரம் வாக்குகளையும் இழக்க அவர் விரும்பவில்லை. அதற்கு அவருக்கு கைகொடுத்தனர் சீமான் போன்றவர்கள். அந்த சில ஆயிரம் வாக்குகளுக்காக வைகோவுக்கு பல தொகுதிகளை தாரைவார்க்கத் தேவையில்லை என்பதாலேயே அவர் வைகோவை கழற்றிவிட்டார்.

சட்டசபைத் தேர்தலில் மாற்றத்தை விரும்பிய தமிழக மக்கள் ஜெயலலிதாவுக்கு வாக்களித்தனர். கூடவே கருணாநிதியின் குடும்பம் செய்த ஊழல்களும் உதவி செய்தன.

வெற்றி பெற்றதும் ஜெயலலிதாவின் பார்வை மத்திய அரசின் மீது வீழ்ந்தது. மத்தியில் தி.மு.க. பங்காளியாக இருக்கும்வரை மத்திய அரசிற்கு தமிழகம் வேண்டாத மாநிலமாகத்தான் இருக்கும். காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க.வை கழற்றிவிட்டால்தான் மத்திய அரசு தமிழகத்தைக் கவனிக்கும் என்பது ஜெயலலிதாவிற்கு புரியாதது அல்ல.

அந்தக் கூட்டணியைப் பிரிக்க வேண்டும் என்றால் காங்கிரஸுக்கு சங்கடங்களை தி.மு.க. ஏற்படுத்த வேண்டும். அதற்கு தி.மு.க.வைதூண்டவேண்டும். அதற்காக ஜெயலலிதா கையில் எடுத்திருப்பதூன் ஈழத்தமிழர்விவகாரம்.

போர்க் குற்றம் தொடர்பாகசர்வதேச விசாரணைக்கு இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று ஜெயலலிதா முதலில் குரல் கொடுத்தபோதே அவர் .எதற்காக காய் நகர்த்துகிறார் என்பது புல்னாகியது.

ஜெயலலிதாவின் ஆஸ்தான அரசியல் ஆலோசகரான துக்ளக் சோ, இலங்கையில் போரே நடக்கவில்லை. அந்த நாடு தனது நாட்டுக்குள் இருந்த பயங்கரவாதி ஒருவரை அழித்திருக்கிறது அவ்வளவுதான். போரே நடக்காதபோது போர்க்குற்றம் என்று எதைச் சொல்வது என்று கேட்டுக்கொண்டிருக்க, ஜெயலலிதா போர்க்குற்றம் குறித்து பேசுகின்றபோதே அவரின் நோக்கம் புரிந்திருக்கவேண்டும்.

பொற்கோவிலுக்குள் இந்திரா காந்தி நடத்தியது போரா என்று துக்ளக் சோ கேட்டுக்கொண்டிருக்க அவரது ஆலோசனையின் கீழ் செயற்படும் ஜெயலலிதா இலங்கை மீது பொருளாதாரத் தடையை வலியுறுத்தினார்.

பாவம் கருணாநிதி பாடுதான் திண்டாட்டமாகப் போய்விட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா நடந்து கொண்டால் அதற்குப் பின்னரும் மத்திய அரசில் ஒட்டிக்கொள்ள முடியாத நிலை தி.மு.க.வுக்கு. அடுத்த தேர்தலில் ஏதாவது ஒரு திராவிடக் கட்சியாவது கிடைக்காவிட்டால் தான் கூட எம்.பி.யாக முடியாது என்பது காங்கிரசின் சிதம்பரம் போன்றவர்களின் நிலை. வேறு வழியில்லாமல் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்கவேண்டி வந்தது. கருணாநிதியின் தலை அதனால் தப்பியது.

மீண்டும் ஜெயலலிதா ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தியிருக்கிறார். இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இலங்கைக்குச் செல்ல தயாராகியது.

அந்தக் குழுவுக்கு ஜெயலலிதா தனது பிரதிநிதியை நியமித்தார். நியமிக்கப்பட்டவர் வேறுயாருமல்ல. ரபி பேர்னாட். இவர்தான் தாய்லாந்தில் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே முதலாவது பேச்சுவார்த்தை நடைபெற்றபோது அங்கு சென்று புலிகளின் ரி.ரி.என். தொலைக் காட்சிக்கு நிகழ்ச்சிகளை நேரடி வர்ணனை செய்தவர்.

இப்போது ஜெயா ரி.வி.யில் அரசியல் நிகழ்ச்சிகளை வழங்குகிறார். அதன் பிரதிபலனாக ஜெயலலிதாவினால் எம்.பி. பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இவரையே இலங்கை செல்லும் குழுவுக்கு நியமித்தார் ஜெயலலிதா.

தி.மு.க.சார்பில் நியமிக்கப்பட்டவர் இளங்கோவன். கருணாநிதியின் மகள் கனிமொழியின் தீவிர ஆதரவாளரான இவரை இந்தக் குழுவிற்கு நியமித்ததே கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.


ஜெயலலிதா சாமர்த்தியமாக முடிவெடுத்தார். தனது பிரதிநிதியை அனுப்பப் போவதில்லை என்று அவர் அறிவித்ததுதான் தாமதம், கருணாநிதியும் தமது பிரதிநிதிகள் யாரும் போகவில்லை என்று அறிவித்தார்.

ஜெயலலிதாவின் அறிவிப்புத்தான் கருணாநிதியின் அறிவிப்புக்கு காரணம் என்று பலரும் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கியதும், கருணாநிதி இப்போது கையில் எடுத்திருப்பது தமிழ்ஈழம் என்ற கோஷத்தை. இதற்கும் மேலாக ஜெயலலிதாவால் போக முடியாது என்பது அவருக்குத் தெரியாததல்ல. எனவே தான் உச்சக் கட்டமாக தமிழீழக் கோஷத்தைக் கையில் எடுத்திருக்கிறார்.

இது மத்தியில் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு நிச்சயம் நெருக்கடியைக் கொடுக்கும். அதனாலேயே தி.மு.க.வுடனான உறவை முறித்துக்கொள்வதைத் தவிர வேறு வழியிருக்காது. கருணாநிதி தனது முடிவை மாற்றிக் கொண்டால், அதனை ஜெயலலிதா கையில் எடுக்கலாம்.

ஆக, தி.மு.க.வுடனான உறவை காங்கிரஸ் முறித்துக்கொள்ளும் வரை தமிழகத்தில் ஈழத் தமிழர்கள் தொடர்பான அரசியல் காய் நகர்த்தல்கள் தொடரத்தான் போகின்றன.

# தெரிவுக்குழுவிற்குச் செல்ல இணக்கப்பாடு அவசியம்



கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

ஆரம்ப இணக்கப்பாடு இல்லாமல் அரசு அமைத்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு செல்ல முடியாதெனவும் தீர்வு தொடர்பான பேச்சில் உண்மையான இணக்கப்பாட்டை எட்டுவதற்கான ஆககபூர்வ அக்கறையை அரசியல் காணககூடியதாக இல்லையெனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தெரிவுக்குழுவுக்கு வரமாட்டோமென நாங்கள் அடம்பிடிக்கவில்லை. பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் அரசும், நாங்களும் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டின்படி செயற்பட வேண்டுமென்பதே எமது கோரிக்கை என்றார் சம்பந்தன்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காத காரணத்தால் அரசியல் தீர்வுப் பேச்சு தாமதமடைவதாக அரசு தரப்புப் பிரதிநிதிகள் இந்திய நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சில் முதலில் அடிப்படை இணக்கப்பாடு எட்டப்படவேண்டும் அதன் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நாங்கள் வருவோமென்பதை ஜனாதிபதியிடமும், பேச்சுக்குழுக்களிடமும் தெரிவித்தேன்.

இதற்கு அவர்கள் உடன்பட்டனர். ஆனால் இபபோது அந்த உடன்பாட்டை மீறும் வகையில் அரச தரப்பினர் செயற்படுகின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க மாட்டோமென நாம் பிடிவாதம் பிடிக்கவில்லை. ஆனால், எமது பேச்சில் அடிப்படை ஆரம்ப இணக்கப்பாடு இல்லாமல் தெரிவுக்குழுவுக்கு எம்மால் போகமுடியாது. இந்தியாவிடமும் இதனை நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கிறோம் என்றார் சம்பந்தன்.

# மின்னலால் 22 பேர் பலி

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரை யான காலப்பகுதியில் மின்னல் தாக்கத் திற்கு இலக்காகி 22 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் மின்னல் தாககத்திற்கு இலக்காகி 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் காலை மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். சிறிபுர பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை எஹலியகொடை பிரதேசத்தில் மின்னல் தாக்கி சிறுவனும் உயிரிழந்துள்ளார்.

16 வயதுடைய பாடசாலை மாணவரொருவரே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சிறுவன நிகழ்வொன்றில் கலந்து கொணடிருந்தபோதே மின்னல் தாக்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மேதினத்தை நடத்துவதை விட்டு ஆன்மீகச் செயலில் ஈடுபடுங்கள்

ஐ.தே.க.விற்கு அமைச்சர் மேர்வின் சில்வா அறிவுரை



(கொழும்பு)

மே தின ஊர்வலத்தை எங்கு நடத்துவது என்பது தொடர்பாக ஐ.தே.க. தலைவர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளதாக பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

களனியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேர்வின் இவ்வாறு கூறினார்.

வரலாற்றில் முதல் தடவையாக இப்புதுவருடத்தின் பின் புதிய வகை போட்டியொன்று ஐ.தே.க.வின் இரு அணிகளிடையே ஏற்பட்டுள்ளது. வடக்கிலா, கொழும்பு -'வாழைத் தோட்டத்திலா மே தின ஊர்வலத்தை நடத்துவது என்பதே இப்போட்டியாகும்.

இந்நாட்டில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. மக்களின் பிரச்சினைகள் குறித்து நாம் கலந்துரையாட வேண்டும். ஆனால் மே தின ஊர்வலம் தொடர்பாக அந்த கட்சி விவாதிக்கிறது என அவர் கூறினார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக கிரம சிங்கவும் ஏனையோரும் யாழ்ப்பாணத்தில் மே தின ஊர்வலத்தை நடத்த முயற்சிப்பதாகவும் ஆனால் ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவும் வேறு சிலரும் கொழும்பு வாழைத்தோட்டத்தில் மே தின ஊர்வலத்தை நடத்த முயற்சிப்பதாகவும் அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

இம்மோதலை நிறுத்தி, இணக்கப்பாடொன்றை காணும்மாறும் அத்தினத்தில் ஆலயமொனறுக்கு சென்று ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் ஐ.தே.க. தலைவர்களை அமைச்சர் மேர்வின் சில்வா கோரியுள்ளார்.

## துருக்கிக்கான முதலாவது இலங்கைத் தூதுவர்



துருக்கிக்கான முதலாவது இலங்கைத் தூதுவராக பாரதி விஜயரத்ன ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனப் பத்திரத்தை ஜனாதிபதி அலரி மாளிகையில் வைத்து கையளித்தார். ஜனாதிபதியின் ஆலோசகராக முன்னர் கடமைபுரிந்து காலமான மனோ விஜயரத்னவின் பாரியாரே பாரதி விஜயரத்ன என்பது குறிப்பிடத்தக்கது.

# விபுலானந்தர் நிறுவகத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவின் வழிகாட்டலில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதில் உப வேந்தர் கலாநிதி கே.பிரேம்குமாரை வரவேற்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை கல்லடி சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கே.கோவிந்தராஜா, கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் கே.மகேசன், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் எல்.ஆர்.பி. திஸாநாயக்க உட்பட அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சுவாமி விபுலானந்தர் அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளராக இதுவரைகாலமும் பணிபுரிந்த திருமதி பாலாம்பிகை ராஜேஸ்வரன் ஓய்வு பெற்றுள்ளதைத் தொடர்ந்து கலாநிதி பிரேம்குமார் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நூதனசாலைத் திருட்டுடன் தொடர்புகள் எதுவுமில்லை



அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

(கொழும்பு)

நூதனசாலை திருட்டுச் சம்பவத்தில், தான் சம்பந்தப்படவில்லை என பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்ககோனுக்கு எழுதிய கடிதமொன்றில் தொலைத்தொடர்புகள், தகவல் துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சியம்பலபிட்டிய சம்பந்தப்பட்டதை நிருபிப்பதற்கு எவ்வித ஆதாரத்தையும் தாம் கண்டறியவில்லை என குற்றப் புல்னாய்வுத் திணைக்களமும் தெரிவித்துள்ளது.

நூதனசாலைத் திருட்டுடன் அமைச்சர் சியம்பலபிட்டிய சம்பந்தப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

ஆனால் அமைச்சர் இது தொடர்பாக தெளிவுபடுத்தியுள்ளதுடன், இக்குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய கடித மொன்றில் தெரிவித்துள்ளார் என குற்றப்புலனாய்வுத் திணைக் கள அதிகாரியொருவர் தெரி வித்தார்.

இதேவேளை, மார்ச் 15 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# கல்கமுவவில் கடும் காற்று; 67 வீடுகள் சேதம்

(கொழும்பு)

கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் வீசிய கடும் காற்று காரணமாக 67 வீடுகள் சேதமடைந்துள்ளன.

புதுருவகந்த, குருந்தன்குளம் மற்றும் கெலேகம ஆகிய பிரதேசங்களை ஊடறுத்து இந்த கடும் காற்று வீசியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலைய ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சரத் லால் குமார தெரிவித்தார்.

அதிகளவான வீடுகளுக்கு சிறு அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இதன்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதுருவகந்த பகுதியில் 49 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், ஒரு வீட்டிற்கு முழுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், குருந்தன்குளம் பகுதியில் வீசிய கடும் காற்றினால் 6 வீடுகளுக்கு சிறியளவில் சேதம் ஏற்பட்டுள்ள அதேவேளை, ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டினார்.

கெலேகம பகுதியில் சுமார் 10 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, இவ்வாறு வீசிய கடும் காற்றினால் குறித்த பகுதிகளில் மின்விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததாகவும், தற்போது மின் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் சரத்லால் குமார மேலும் சுட்டிக்காட்டினார்.

# புனர்வாழ்வு பெறாத புலிகளை அடையாளம் காணத் தேடுதல்

(கொழும்பு)

புலிகளின் முன்னாள் உறுப்பினர்களைத் தேடிப்பிடிக்கும் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்று கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசின் புனர்வாழ்வுக்கு உட்படாமல், மறைந்துள்ள மற்றும் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களைக் குறிவைத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தீவிரவாத விசாரணைப் பிரிவு மற்றும் ஏனைய அரச புலனாய்வுச் சேவைகள் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

அத்துடன் புலிகள் இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பதிவுகளின் போது, புனர்வாழ்வுக்கு உட்படாத முன்னாள் புலி உறுப்பினர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதா இல்லையா என்பதை புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் முடிவு செய்யவுள்ளனர்.

எனினும் எவரும் கைது செய்யப்படப் போவதில்லை என றும் முன்னாள் புலி உறுப்பினர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

# தமிழக கிணற்றுத் தவளைகளுக்கு சுதர்சன நாச்சியப்பன் சொன்னது!



இலங்கையில் தமிழ் பிரதேசங்களில் உண்மையில் என்ன நடக்கிறது? அம்மக்கள், சிலர் நினைப்பது போல அல்லது சில ஊடகங்களில் சித்தரிக்கப்படுவது போன்று உண்மையிலேயே கஷ்டப்படுகிறார்களா? என்பதை தமிழக அரசியல் தலைவர்களான முதல்வர் செல்வி ஜெயலலிதா, கலைஞர் மு. கருணாநிதி, வை. கோ., பழ. நெடுமாறன், சீமான், விஜயகாந்த் போன்றோர் நேரடியாக சென்று பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

வெறுமனே கடல் கடந்து கண்ணுக்கு எட்டாத தூரத்தில் நின்று உண்மை எதுவென்று நேரில் காணாது கூக்குரலிடுவதால் எவ்விதமான பலனும் ஏற்படப் போவதில்லை. வெறும் கிணற்றுத் தவளைகளாக இங்கிருந்து, உண்மை நிலவரம் தெரியாது தமிழக மக்களை குழப்பி வருவதோடு, அங்குள்ள தமிழ் மக்களின் வாழ்க்கையையும் குழப்புவதாக இந்தத் தலைவர்கள் உள்ளார்கள்.

முப்பது வருடகால கொடூரமான யுத்தம் நிறைவடைந்து இன்னும் மூன்று வருடங்கள் கூட பூர்த்தியாகாத நிலையில் அழிவுகள் அனைத்திற்குமே தீர்வு காணப்பட்டுவிட்டதாக பொய்யுரைக்கத் தேவையில்லை. ஆனால் இந்த மூன்று வருட காலத்தில் இலங்கை அரசாங்கம் தனது சக்திக்கும் மீறி வெளிநாட்டு உதவிகளுடன் தமிழருக்கு அதிகமாகவே செய்துள்ளதை நேரில் சென்று பார்த்தபோது என்னால் உணர முடிந்தது.

குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அவை படிப்படியாக தீர்த்து வைக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் இராணுவம் இருப்பதை மக்கள் விரும்பவில்லை எனத் தெரிவித்தனர். இப்போது பல மினி இராணுவ முகாம்கள், சந்திக் காவலரண்கள் மூடப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் மூலமாக அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆர்வமாக உள்ளது.

இலங்கை அரசாங்கமும் அதே நிலைப் பாட்டிலேயே உள்ளதால் அதில் பிரச்சினை எழ வாய்ப்பில்லை. இரு தரப்பும் ஒத்துச் சென்றால் மூன்றாம் தரப்பு என்ற பேச்சுக்கு அவசியமேற்படாது.

வவுனியா மெனிக் பாம் அகதி முகாம் மக்களைச் சந்தித்தபோது அவர்கள் தெரிவித்த சில கருத்துக்கள் மனதிற்கு சங்கடத்தை ஏற்படுத்தின. குறிப்பாக காணாமற் போனோர் குறித்த கதைகள் மனதை உருக்கின. அந்த மக்களின் அகதிமுகாம் வாழ்விற்கு இந்த வருடம் ஜூன் மாதத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்படுமென எம்முடன் அங்கு வந்திருந்த மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் உறுதியளித்தார். அது திருப்தி தரக் கூடியதாகவே நாம் அங்கு பார்த்த நிலைமைகள் அமைந்திருந்தன.

எனவே தமிழக அரசியல் தலைமைகள் உண்மை நிலை புரியாது தமிழக மக்களது உணர்வுகளைத் தூண்டிவிடும் வகையில் செயற்படக்கூடாது. உண்மையில் இலங்கைத் தமிழரில் ஜெயலலிதா, கருணாநிதி, சீமான் போன்றோருக்கு அக்கறை இருப்பின் அவர்கள் இலங்கைக்கு நேரடியாக சென்று நிலைமையை அவதானித்து வந்து தமது மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

## பஞ்சத்தை எப்படி கையாளப் போகிறோம்?



தட்ப வெப்பநிலை மாற்றங்கள் என்ற சொல் (Climate Change) இன்று ஒருபுறம் அறிவியலாகவும், மறுபுறம் கருத்தியலாகவும் (Ideology) பார்க்கப்படுகிறது. மரபணுக்களை சோதனைச்சாலையில் மாற்றித் தயாரிக்கப்படும் தானிய/ காய்கறிகளைப் பயன்படுத்துவதை ஒரு சாரார் அறிவியல் முன்னேற்றம் என்றும், இன்னொரு சாரார் அது வணிகம் செய்யும் பம்மாத்து, பாரம்பரியமாக மனித குலம் உருவாக்கிய விதைகளின் தொடர்ச்சியை அறுத்துச் செய்யும் அறியாமையில் விளையும் விபரீதம் என்றும் பார்க்கிறார்கள்.

அறிவியல் அணுகல் என்பது தட்ப வெப்ப நிலைகளில் ஏற்பட்டு வரும் மாறுதலால் உலகெங்கும் வரப் போகிற பெரும் உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்க வெறும் மரபணு மாறுதலால் கிட்டும் விதைகளை மட்டும் நம்பிப் பயனில்லை. நாம் இன்னும் என்னென்னவோ விதங்களில் நம் உணவு உற்பத்தி முறையை மாற்ற வேண்டும் என்று எழுதுகிறார் ஒரு அறிவியலாளர்.

குறிப்பாக தொழில்முறையில் விதைகளை உற்பத்தி செய்து விற்கும் நிறுவனங்களை நம்பிப் பலனில்லை. நாம் மொத்த விவசாய முறைகளை மாற்ற வேண்டும் என்கிறார். என்ன மாறுதல் என்று பார்த்தால், மேற்கில் பல பத்தாண்டுகளாகப் பயன்படுத்தப்படும் பெரும் தொழில் முறை விவசாயம் (Industrial agriculture) கைவிடப்பட்டு, மாற்று முறைகள் கொணரப்பட்டு விவசாயம் சூழலியல் கண்ணோக்கில் நடத்தப்பட வேண்டும் என்கிறார்.

தொழில்முறைப்பட்ட விவசாயம் குறைப்பார்வையோடு பரந்த வகைகள் கொண்ட விவசாயத்தை மிகச் சில வகைகளான விதைகளில் குறுக்கி நாசத்தைக் கொணரவிருக்கிறது. நாம் பாரம்பரிய விவசாயத்தை முற்படுத்தி பன்முகப்பட்ட விளைச்சல் முறைகளைக் கொணர்வது மிக மிக அவசியம் என்று வாதிடுகிறார்.

கீழைத்தேய கிராமங்களின் பாரம்பரிய விவசாயிகள் வெகு காலமாக இதைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நகரத்தின் அறிவாளர்கள் அவர்களை இளக்காரமாகப் பார்த்து, விவசாயத்தை பெருமளவு நாசம் செய்திருக்கிறார்கள். இனியொரு தலைமுறை எழுந்து வந்து விவசாயப் பாரம்பரியத்தைப் புதுப்பிக்க வேண்டும் செய்யுமா?

## பூமி சுற்றத்தான் செய்கிறது!



கலிலியோ, தொலைநோக்கியைக் கண்டுபிடித்து, விண்வெளியை ஆராய்ந்து, பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருகிறது என்று அறிந்தார். (அவருக்கு முன், கோபர்ணிகஸ் கண்டுபிடித்த உண்மைதான் அது!)

கலிலியோ இதை ஆதாரங்களுடன் அழுத்திச் சொன்னது, பாதிரியார்களுக்கும், போப்பாண்டவருக்கும் பிடிக்கவில்லை. "மத விரோதமானது..." என்றனர்.

இந்த உண்மையை, இரண்டு பேர் விவாதிப்பது போல, கலிலியோ ஒரு புத்தகம் எழுதினார். அந்தப் புத்தகத்தில், "பூமி சுற்றவில்லை" என்று வாதிடும் ஆள், பித்துக்குளித் தனமாகவும், அசடு போலவும் பேசுவான். அந்தப் பாத்திரம், போப்பாண்டவரைத் தான் குறிக்கிறது என்று பலர் கோள்மூட்டி விட்டனர்.

வாடிகனுக்கு உடனே வரும்படி, கலிலியோவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. கிழவரான கலிலியோ, போப்பாண்டவரின் கட்டளையை மீற முடியாமல், அங்கே சென்றார். போப்பாண்டவர் முன் மண்டியிட்டு, தலை குனிந்து, கோபர்ணிகஸின் கருத்து மிகவும் தவறு என்றும், இனி, அதைப் பரப்பினால், தனக்கு மரண தண்டனை விதிக்கலாம் என்றும், இப்போதைக்குத் தன்னை மன்னிக்கும்படியும், ஒரு உறுதிப் பத்திரம் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

ஆனால் அவர், "கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டேனே தவிர, பூமி என்னவோ சுற்றத்தான் செய்கிறது..." என்று முணுமுணுத்தபடியே வெளியே வந்தாராம்.

## ரிவோல்வர் பாட்டி!

மூப்பைக் காட்டும் நரை விழுந்த தலைமுடி, முக்காடு, ஆண்கள் அணியும் முழுக்கை சட்டை, மூக்கில் பெரிய மூக்குத்தி என 78 வயதான இந்த மூதாட்டி பெயர் சந்திரா தோமர்.

இவருக்கு 15 பேரக் குழந்தைகள் உள்ளனர். உத்தரப்பிரதேசத்தில், ஒரு குக்கிராமத்தில் உள்ள சின்னஞ்சிறிய வீட்டில் வசிக்கும் இவர்தான், உலகின் மிக வயதான (தொழில் ரீதியான) துப்பாக்கி சுடும் வீராங்கனை. 25க்கும் மேற்பட்ட துப்பாக்கி சுடும் போட்டிகளில் பங்குபற்றி, பதக்கங்களையும், பரிசுகளையும் வாங்கி குவித்துள்ளார்.

துப்பாக்கி சுடுவதில், இவருக்கு ஆர்வம் வந்தது 15 ஆண்டுகளுக்கு முன். இவரது ஊரில் உள்ள ஒரு கிளப்பில், துப்பாக்கி சுடும் பயிற்சி மையம் இருந்தது. அதில் இவரது பேத்தி, பயிற்சி பெற்று வந்தார். அவரை பயிற்சி மையத்துக்கு அழைத்துச் சென்று, மீண்டும் வீட்டுக்கு அழைத்து வந்து கொண்டிருந்தார் சந்திரா.



அங்கு துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டவர்களைப் பார்த்து, தானும் பயிற்சிபெற வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். தன் பாட்டியின் ஆசை குறித்து, பயிற்சியாளரிடம் விளக்கினார் பேத்தி.

சந்திராவை பயிற்சியில் சேர்த்துக் கொண்டார் பயிற்சியாளர். துப்பாக்கியை பிடித்ததும், தொடக்கத்தில் சந்திராவின் கைகள் நடுங்கினாலும், சில நாட்களில் தேறிவிட்டார். ஒரு சில மாதங்களிலேயே துப்பாக்கி சுடுவதில் நன்கு தேர்ச்சி பெற்று விட்டார். இதன்பின், போட்டிகளிலும் பங்கேற்று தற்போது உலகின் மிக வயதான துப்பாக்கி சுடும் வீராங்கனை என்ற பெருமை யையும் பெற்றுள்ளார்.


"துப்பாக்கி சுடும் போட்டிகளில் ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவம் ஏதாவது உண்டா?" எனக் கேட்டதற்கு, "ஒரு போட்டியில், டெல்லியைச் சேர்ந்த பொலிஸ் டி.ஐ.ஜி. ஒருவரும், போட்டியாளராக கலந்து கொண்டார். இறுதிச் சுற்றில், அவரை நான் தோற்கடித்தேன். இதை என்னால் மறக்கவே முடியாது..." என தன் பொக்கை வாயைத் திறந்து, கலகலவெனச் சிரிக்கிறார் இந்த 78 வயது ரிவோல்வர் ரீட்டா.

# சினிமா சினிமா

☛ தமிழகத்திலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும், கைதிகளுக்காக பொழுதுபோக்குப் படங்களைத் திரையிட அரசு திட்டமிட்டுள்ளது. குறிப்பாக, தவறு செய்தவர்கள் திருந்தி வாழ முயற்சி செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் படங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமாம்! முன்னோட்டமாக, சமீபத்தில் சேலம் சிறைச்சாலையில் "நண்பன்" படம், கைதிகளுக்காகத் திரையிடப்பட்டுள்ளது.




☛ தற்போது, "விஸ்வரூபம்" மற்றும் "இரண்டாம் உலகம்" என்று பிஸியாக நடித்து வருகின்ற போதும், மேடைக் கச்சேரிகளில் பாடுவதை நிறுத்தவில்லை ஆண்ட்ரியா. மாதம் இரண்டு கச்சேரிகளிலாவது பாடி வருகிறார். "என்னைப் பொறுத்தவரை, சினிமாவில் நடிப்பதை விட, மேடைகளில் பாடுவதில்தான் அதிக சந்தோஷம் கிடைக்கிறது. பாடி புகழ் பெறுவதையே நான் விரும்புகிறேன்..." என்கிறார். பாடிப் பேர் வாங்க நினைக்கும் நடிகை!



☛ "ஈரம்", "வேலூர் மாவட்டம்" படங்களுக்குப் பிறகு, "வந்தான் வென்றான்" படத்திலும் வில்லனாக நடித்திருந்தார் நந்தா. அந்தப் படம் வெற்றி பெறாததோடு, பலரும், "உங்களுக்கு வில்லன் வேடம் செட்டாகவில்லை..." என்று சொல்லி விட்டனராம். அதனால், இனி வில்லன் வேடத்தில் நடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கும் நந்தா, தற்போது, "சிருங்காரம்" படத்தை தானே இயக்கி நடித்து வருகிறார்.



☛ ஒரு காலத்தில், தன் கால்களின் கவர்ச்சியைக் காட்டியே, கோலிவுட் மற்றும் பொலிவுட் ரசிகர்களை கொள்ளை கொண்டவர் ஸ்ரீதேவி. அதே பழக்கத்தில், அவர் இப்போதும், மும்பை பட விழாக்களுக்கு உடையணிந்து வருவதை, ஒரு பெண்கள் அமைப்பு தொடர்ந்து எதிர்த்து வந்தது. சமீபத்தில் ஸ்ரீதேவி, கால்கள் தெரியும் கவர்ச்சி உடையுடன் ஒரு விழாவுக்கு வந்தபோது, மறியல் போராட்டம் நடத்தியது அந்தப் பெண்கள் அமைப்பு. இதனால், அவமானத்தில் அந்த விழாவில் கலந்து கொள்ளாமலே வீட்டிற்குத் திரும்பி விட்டாராம்.



# ஜெஃப் டயர்

ஒரே ஒரு திரைப்படத்தைப் பற்றி முழுப் புத்தகங்கள் எழுதுவது மேலை நாடுகளில் அடிக்கடி நடப்பது உண்டு. எடுத்துக்காட்டாக ராஷோமான் என்கிற ஜப்பானியத் திரைப்படம் பற்றியோ, வேர்ஜின் ஸ்ப்ரிங் என்கிற இங்மார் பெக்மன் படம் பற்றியோ தனிப் புத்தகங்கள் எழுதுவது அங்கு சகஜம். ஹிட்ச்கொக், ஜோன் ஃபோர்ட், த்ரூஃபோ, கோடார்ட் ஆகியோர் பற்றிய புத்தகங்கள் கணிசமான எண்ணிக்கையில் உண்டு. ஏன் கென் லோஷ் போன்ற அவ்வளவு பிரபலமாகாத ஆனால் வித்தியாசமான படங்களை எடுத்த இயக்குநர்கள் பற்றிக் கூடத்தான், புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஒரு இலக்கிய விமர்சனப் புத்தகம் போலல்லாது, திரைப்படங்களை ஒரு கல்வித் துறையாகவே பாவித்து அதில் பயில்வதையே தம் முனைப்பாகக் கொண்ட ஒரு சிறுபான்மை வாசகர்களுக்காக எழுதப்பட்ட புத்தகங்களாகவே அமைந்திருக்கும்.

அப்படி இல்லாது பொது வாசகர்களுக்கும் சேரும் வகையில், சமீபத்தில் அன்ட்ரேய் ஆர்ஸென்யெவிச் டார்கோவ்ஸ்கியின் ஒரே ஒரு படத்தைப் பற்றி ஒரு முழுப் புத்தகம் எழுதி இருக்கிறார் ஜெஃப் டயர்.


ஸோனா (Zona) என்கிற இந்தப் புத்தகம் டார்கோவ்ஸ்கி (ரஷ்யத் திரைப்பட இயக்குநர்) எடுத்த த ஸ்ரோக்கர் (The Stalker) என்கிற ஒரு படத்தைப் பற்றிய விரிவான சிந்தனைகளைக் கொண்ட புத்தகம். அந்தப் படம் மிகவும் பூடகமான கதையையும், திரைப்பட அமைப்பையும் கொண்ட ஒரு படைப்பு. அதில் என்ன காரணத்தாலோ மிக ஆழ்ந்து போனதால், அதைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினால்தான் தீரும் என்ற நிலைக்கு வந்திருக்கிறார் டயர்.

ஜெஃப் டயர் வழக்கமான "அறிவு ஜீவி"த்தனங்களை வைத்து கூத்துக் கட்டாமல், அவற்றை ஓரளவு ஓரங்கட்டி வைத்து எழுதுபவர். ஆகையால் இந்த சினிமா பற்றிய "தியானத்தை" அவர் பக்திப் பரவசமாகவும் ஆக்கவில்லை, சில கலை சினிமா வெறியர்களைப் போல டார்கோவ்ஸ்கியை மூடுமந்திரமாக ஆக்கி, பீடத்திலேற்றி வழிபடவும் இல்லை.

மாறாக டார்கோவ்ஸ்கியின் சினிமா, குறிப்பாக த ஸ்ரோக்கர் படம், எப்படி பல ஆண்டுகள் கடந்தாலும் இன்னும் நம்முடன் உரையாடக் கூடிய ஒரு கலைப்படைப்பாகவும், எதிர்காலத்துள் நோக்கக் கூடிய ஒரு அதிசயப் படைப்பாகவும் இருக்கிறது என்பதை கலகலப்பான உரையாடல் போன்ற நடையில் எழுதிப் போகிறார்.

டயர் (Geoff Dyer) வாழ்க்கையின் விசித்திரங்களையும், பாணிகளையும் ஈடுபாட்டுடன் கவனிக்கும் வாழ்க்கை ரசிகர். அதில் குதூகலமாய் திளைக்கும் விசிறி என்று கூடச் சொல்லலாம். அதனால் பார்ப்பது, கேட்பது, ருசித்தது, அனுபவித்தது என்று பலதையும் பற்றி தனக்காகவும், நமக்காகவும் குறிப்புகளாய் எழுதித் தள்ளுகிறார்.


இவை நம்மை களிப்பில் முழுக்காட்டும் வகை எழுத்துகளும் இல்லை, நம் கண்ணில் நீர் வருமளவு அறுவையான சுய விசாரங்களும் இல்லை. நீரில் பாதி உடல் மூழ்கி இருக்க, மேல்பரப்பில் தலையையும் உடலையும் வைத்து நீந்துபவனைப் போல, அகத்தில் பாதி மூழ்கியபடி, புறத்தில் ஒக்ஸிஜனைச் சுவாசித்துக் கொண்டு உரைநடையில் நீந்துகிறார். படைப்புகளின் சாரத்திலும், வடிவத்திலும் வழிந்தோடுகிற




சமூகத்துக்கும் பொதுவில் கிட்டக் கூடியதைப் பிரித்து எடுத்துக் கொடுப்பவர்கள். அப்படி ஒரு மனிதராகத் தாம் இருப்பதையே ரசித்துச் செய்பவர்கள். இது டயருக்குப் பொருந்தும்.

மொத்தப் புத்தகமும் டார்கோவ்ஸ்கியின் ஒரு திரைப்படத்தை முகாந்திரமாக வைத்து, ஆழஅகலமாக யோசித்ததைக் கொடுக்கிறது. இதில், சுயமாக வெளிப்படுவது எங்ஙனம் என்ற கேள்வி எழலாம். முடியும். அதைக் காட்டுவதுதான் டயரின் சாதுரியம். நம்மை எத்தும் சாதுரியம் இல்லை, நம்மை உயர்த்தும் சாதுரியமது.

டயர் எழுதிய ஒரு குறிப்பின் மொழி பெயர்ப்பு இது: "சில வகை எழுத்தாளர்கள் தம்முடைய



அழகுணர்வு கொடுக்கும் அனுபவ அறிவை, தன் புரிதலை நமக்குக் கொடுக்க சரளமான மொழியில் எழுதக் கூடியவராகவும் இருக்கிறார். அந்தப் புரிதல் நம்மிடம் என்னென்ன மாறுதல்கள் அடையுமோ என்று யோசிக்கும் ஒரு பாரம்பரியத்தில் வருவதால் தன் புரிதலை இறுதிப் புரிதல் என்று இறுமாப்பு கொள்வதில்லை. அதை இலேசாக, ஒரு நிகழ்த்திக் காட்டலாக முன்வைக்கிறார். குறிப்புரை எழுதுவோரில் பலரும் சுயமாக எழுதக்கூடியவராக இருந்தும், அதை விலக்கிப் பிறருடனும், பிறரின் படைப்புகளுடனும் உறவாடி, பாலைப் பிரித்துண்ணும் அன்னத்தைப் போல, அவற்றிலிருந்து தமக்கும்,

படைப்புகளைத் தவிர வேறெதிலும் இறங்கி ஈடுபடத் தயங்குகிறார்கள். குறிப்புரைகள் கவனச் சிதறல் என்பது அவர்கள் கருத்து. இரண்டாம் பட்சமான வேலை, அத்தனை முக்கியமல்லாத வேலை. ஆனால் வேறு வகை எழுத்தாளர்கள் உண்டு - நான் நேரடியாக விமர்சகராகவே இருப்பவர்களைச் சொல்லவில்லை - இந்த எழுத்தாளர்களுக்கு குறிப்புரை என்பது அவர்களுடைய படைப்புத் திட்டங்களுக்கு மையமான ஒரு விஷயம். ஏதோ ஒரு தளத்தில் ஒரு நாவலாசிரியரின் படைப்பளவுக்கு அசலான படைப்பாக குறிப்புரை என்பது அமையக் கூடும் என்பது இவர்கள் கருத்து...

**- மைத்ரேயன்**

# மலையேறும் மழலை!

ஆர்யா சகாய முல்யா சுகியர்தோ! என்ன, பெயரை படிக்கும்போதே தலை சுற்றுகிறதா? . இந்த ஏழு வயதுச் சிறுவனின் சாதனையை கேட்டால், மயக்கமே வந்து விடும். ஆர்யா, இந்தோனேசியாவைச் சேர்ந்த சிறுவன். இவன் தந்தை, மலையேற்ற வீரர்.

இதனால், இந்த சிறுவனுக்கும், பால் மணம் மாறாத வயதிலேயே மலையேறும் ஆசை வந்து விட்டது. தன் தந்தையிடம் கற்றுக் கொண்ட வித்தையை உதவியாக வைத்து, இதுவரை உலகின் மிகவும் பிரபலமான, 14 மலைச் சிகரங்களின் உச்சியை தொட்டு விட்டான். ஜாவாவில் உள்ள செமரு, லோம்போக்கில் உள்ள ரிஞ்சனி ஆகியவை இந்த சிறுவனின் காலடி பட்ட மலைச் சிகரங்களில் முக்கியமானவை. மூன்று வயதாகும்போதே, யாருடைய உதவியும் இன்றி மலையேறத் தொடங்கி விட்டான்.

தன் சாதனைத் தொடர்களின் அடுத்த கட்டமாக, ரஷ்யாவில் உள்ள மிக உயர்ந்த எல்பரஸ் மலையில், ஏறத் திட்டமிட்டுள்ளான். ஐரோப்பா - ஆசியா எல்லையில் உள்ள இந்த மலைச் சிகரம், ஐரோப்பாவின் மிக உயரமா்ன மலை. கடல் மட்டத்தை விட, 18 ஆயிரத்து, 500 அடி உயரமானது. 22 பனி அடுக்குகளை கொண்டது. பனிச் சரிவு, பனிப் புயல் போன்ற இயற்கை பேரிடர்களுக்கு பெயர் பெற்றது. ஆனாலும், உயிரைப் பொருட்படுத்தாமல், இந்த மலையில் ஏறிச் சாதனை படைக்கத் திட்டமிட்டுள்ளான், ஆர்யா.



# நட்புறவை வலுப்படுத்த மாலைதீவில் கடற்பயிற்சி


(கொழும்பு)

மாலைதீவுக் கடலில் நேற்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கடற்பயிற்சியில் இலங்கை கரையோரக காவல் படையினர் பங்குபற்றுவதாக கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு கரையோரக் காவல் படையினர் இணைந்து நடத்தும் இந்தக் கடற்பயிற்சியில் கலந்துகொள்வதாக கரையோரக் கண்காணிப்புக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ் சாகர மாலைதீவு நோக்கி சென்றுள்ளது.

நாடுகளிடையே நட்புறவை வலுப்படுத்தல், பரஸ்பர செயலாற்றுகையை விருத்தி செய்தல் என்னும் நோக்கங்களுடன் இப்பயிற்சி நடத்தப்படுகிறது. இப்பயிற்சியின்போது கடல் ஆராய்ச்சி, மீட்பு வேலைகள், கடல் மாசுபடுத்தலை தடுத்தல் என்னும் விடயங்களில் கவனம் செலுத்தப்படும்.

இந்நாடுகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அமைந்துள்ளதால் சகல கடலோடிகளுக்குமாக இந்துசமுத்திரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மூன்று நட்பு நாடுகளினதும் கரையோரப் படைகளின் இலட்சியமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



மிருசுவில் புகையிரத தரிப்பு நிலையம் துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. தொழிலாளர்கள் நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். (படம்: ஜெ.கலையகன்)

## மின் உற்பத்தி நிலையத்தால் கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு ஆபத்து?

(கொழும்பு)

கொத்மலை ஓயாவை மறித்து தலவாக்கலை லிந்துல பகுதியில் அமைக்கப்படும் சிறிய மின் உற்பத்தி நிலையம் காரணமாக பாரிய செலவில் அமைக்கப்பட்டு வரும் மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தலவர் அஷோக ஷேபால எச்சரித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் டி.பி.ஜி.குமாரசிறி. இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த தினத்தில் கொத்மலை ஓயா நீரைப் பாவனைக்கு எடுத்துக் கொண்ட தலவாக்கலை லிந்துல பிரதேச மக்கள் பலர் வயிற் றோட்டத்திற்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

## லிந்துலையில் வயிற்றோட்டம்; 15 பேர் மருத்துவமனையில்



(கொழும்பு)

வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட மேலும் 15 பேர் லிந்துலை மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இந்த நிலைமை மேலும் வலுவடையலாம் என மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் இந்திக பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார். நோய் நிலைமை பதிவான நாள் தொடக்கம் இதுவரை 300 நோயாளர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடியதாகவும் 10 நோயாளர்கள் தொடர்ந்து தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

## ரயிலில் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்தில் ஓடும் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 09.40 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் பாதுக்கை - மிரியகல்ல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## கல்முனையில் 15 அடி முதலை

(கல்முனை)

கல்முனைப் பிரதேசத்தில் 15 அடி நீளமுள்ள முதலை நேற்று முன்தினம் மாலை வன பரிபாலன சபை அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளது.

கல்முனை - பாண்டிருப்பு தாளாவட்டான் சந்தியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்தே இம் முதலை பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிணற்றில் முதலையைக் கண்ட பொதுமக்கள் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததையடுத்து தொடர்ந்து பொலிஸாரின் உதவியுடன் வனப்பரிபாலனை சபை அதிகாரி கள் முதலையை பிடித்து லொறியில் ஏற்றிச் சென்றனர்.



இந்தக் கிணறு உடைக்கப்பட்டு இம் முதலை பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்கமுவவில் கடும் காற்று; 67 வீடுகள் சேதம்

(கொழும்பு)

கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் வீசிய கடும் காற்று காரணமாக 67 வீடுகள் சேதமடைந்துள்ளன.

புதுருவகந்த, குருந்தன்குளம் மற்றும் கெலேகம ஆகிய பிரதேசங்களை ஊடறுத்து இந்த கடும் காற்று வீசியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலைய ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சரத் லால் குமார தெரிவித்தார்.

அதிகளவான வீடுகளுக்கு சிறு அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இதன்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதுருவகந்த பகுதியில் 49 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், ஒரு வீட்டிற்கு முழுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், குருந்தன்குளம் பகுதியில் வீசிய கடும் காற்றினால் 6 வீடுகளுக்கு சிறியளவில் சேதம் ஏற்பட்டுள்ள அதே வேளை, ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டினார்.

கெலேகம பகுதியில் சுமார் 10 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, இவ்வாறு வீசிய கடும் காற்றினால் குறித்த பகுதிகளில் மின்விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததாகவும், தற்போது மின் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் சரத்லால் குமார மேலும் சுட்டிக்காட்டினார்.

## கொழும்பு வைத்தியசாலையில் நோயாளி தூக்கிட்டு தற்கொலை

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நோயாளி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 01.45 மணிளவில் இடம் பெற்றுள்ளதாக கொழுமபு தேசிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிககின்றன.

குறித்த நோயாளி தான் சிகிச்சை பெற்று வந்த 72 ஆம் இலக்க வாட்டின் கழிவறைக்குள் சென்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

திவுலபிட்டி - உல்லபொல பகுதியைச் சேர்ந்த சி.எம்.ஜயசிறி என்பரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

சம்பவம் குறித்து மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கிகளுடன் மூவர் கைது

(கொழும்பு)

கொஸ்கொட - மஹஇதுருவ பகுதியில் உள்நாட்டுத் தயாரிப்புத் துப்பாக்கிகளுடன் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொஸ்கொட பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இம்மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் துப்பாக்கிகளுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## ஹிஸ்புல்லாஹ் மறுப்பு

(கொழும்பு)

தம்புள்ளை பள்ளிவாசல் விடயம் குறித்து கம்பளையில் இடம் பெறறதாக் கூறப்படும் கூட்டத்தில் தான் பங்கேற்கவில்லை என பரதி அமைச்ர் எம்எல்ஏ.எம்ஹிஸ் புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

கம்பளையில் கூட்டம் இடம் பெற்றதாக தான் அறிந்திருக்கவில்லை எனவும் அப்படி ஒரு கூட்டத்திற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கூட்டத்தில் தான் கலந்து கொண்டதாக வெளியான தகவலில் உண்மை இல்லை என பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ புல்லாஹ் மறுத்துள்ளார்.

## உடனடி குளிர்பானம்

(யாழ்ப்பாணம்)

தற்போதுள்ள அதிகரித்த வெப்பநிலையால் யூஸ், உடனடி தயாரிப்பு குளிர்பானம் என்பன அதிகளவில் நுகரப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தி பலரும் இவற்றினைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

தேசிப்பழம், தோடம்பழம், சுவையூட்டி, நிறமூட்டி, ஐஸ்கட்டி என்பவற்றைச் சேர்த்து உடனடி குளிர்பானம் தயாரிக்கப்படுகின்றது.

இக்குளிர்பானங்களை பல்வேறு இடங்களிலும் வெற்றுக் கைகளினாலேயே சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. உரியவர்கள் இது தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## ஆற்றங்கரை படப்பிடிப்பு இரு உயிரைப் பலியெடுத்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கிரான் பிரதேசத்தில் உள்ள ஆற்றில் தவறி விழுந்து இருவர் உயிரிழந்துள்ளனர். கிரான் துறையடியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்ணகிபுரம் வாழைச்சேனையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை திலிப்குமார் (வயது - 24) அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை கேதீஸ் (வயது- 18) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் வாழைச்சேனை மிராவோடையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் கல்வி பயில்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆறு பேர் கொண்ட குழுவினர் ஆற்றங்கரையோரத்தில் இருந்த கல் ஒன்றின் மேலே நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டிருக்கும் போது ஒருவர் தவறி விழுந்ததையடுத்து அருகருகே இருந்த மேலும் நால்வரும் தவறி விழுந்துள்ளனர்.

இவர்களில் இருவர் உயிரிழந்தனர். ஏனைய மூவரும் பொது மக்கள் மற்றும் இராணுவத்தினரால் காப்பாற்றப்பட்டனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் வாழைச்சேனை மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை - மதுரைக்கு விரைவில் நேரடி விமானம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் தமிழகம் மதுரைக்கு இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளதாக இந்திய காங்கிரஸ் கட்சி எம்..பி மணிககா டகொரே தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்த நான்கு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மணிக்காடகொரேவும் ஒருவராவார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் இரு நாட்டு கலாசார உறவுகளை மேம்படுத்திக் கொள்வது குறித்து கலந்து ரையாடப்பட்டதாகவும் இதன் போது மதுரை - இலங்கைக் கிடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிக்க ஜனாதிபதி இணங்கியதாகவும் மணிகா டகொரே குறிப்பிட்டுளளார்.

31. கணினித்துறையில் பொற்காலம் என அழைக்கப்படும் ஆண்டு?
1) 2000 ஆம் ஆண்டு
2) 1998 ஆம் ஆண்டு
3) 2012 ஆம் ஆண்டு
4) 1991 ஆம் ஆண்டு

32. கணினி குற்றவாளிகளில் ஒரு வகையானவர்கள்,
1) குறும்பர்
2) தேடுவன
3) பின்தொடர்வோர்
4) சேகரிப்போன்

33. VGA இதனுடைய விரிவாக்கம்?
1) Video Graphics Array
2) Visual Graphics Array
3) Volatile Graphics Array
4) Video Graphics Adapter

34. 3.5 inch floppy யின் கொள்ளளவு?
1) 1.40 MB
2) 1.44 GB
3) 1.40 GB
4) 1.44 MB

35. தணினி செய்நிரலில் உள்ள வழுவிற்கு வழங்கும் பெயர்?
1) தவறு
2) தவறுநீக்கு
3) தொடரியல்
4) நச்சுநிரல்

36. மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் பற்றிய தரவுகளைக் கொண்ட ஓர் அட்டவணையில் விசைப்புலத்திற்கு உதாரணம்?
1) அனுமதிக்கப்பட்ட திகதி
2) பெயர்
3) அனுமதி எண்
4) முகவரி

37. $1011_2$ இன் தசமவலு?
1) 10
2) 11
3) 12
4) 13

## விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 3 | 21) | 4 | 31) | 4 |
| 2) | 2 | 12) | 1 | 22) | 2 | 32) | 1 |
| 3) | 1 | 13) | 2 | 23) | 1 | 33) | 1 |
| 4) | 4 | 14) | 3 | 24) | 1 | 34) | 4 |
| 5) | 2 | 15) | 2 | 25) | 1 | 35) | 1 |
| 6) | 1 | 16) | 4 | 26) | 4 | 36) | 3 |
| 7) | 2 | 17) | 3 | 27) | 1 | 37) | 2 |
| 8) | 1 | 18) | 3 | 28) | 2 | 38) | 1 |
| 9) | 1 | 19) | 3 | 29) | 3 | 39) | 1 |
| 10) | 1 | 20) | 1 | 30) | 1 | 40) | 2 |

38. 25 என்ற தசமவலு எண்ணிற்குச் சமவலுவான எண்?
1) 11001
2) 101100
3) 11011
4) 01010

39. பின்வருவனவற்றுள் உள்ளீட்டின் நிரப்பியைத் தரக்கூடிய தர்க்கவாயில் எது?
1) NOT
2) AND
3) OR
4) XOR

40. பின்வருவனவற்றுள் எது மூறைமை மென் பொருள்?
1) Ms power point
2) Ms windows XP
3) 3D Studio max
4) Ms excel





# ICT & GIT மாணவர்களுக்கான MCQ வினா விடைகள

# கல்வி முரசு

(AJ. Nimalrajan)



01. பின்வருவனவற்றிலிருந்து CPU இன் பகுதிகளை இனங்காண்க?
A-memory B-monitor C-modem D-AUL E-hard disk F-control unit
1) A,C,F
2) B,C,E
3) A,D,F
4) B,D,F

02. தனிநபர் கணினி பின்வருவனவற்றுள் எவ்வகையைச் சேர்ந்தது?
1) Mini computer
2) Micro computer
3) Main frame computer
4) Super computer


03. கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர்?
1) Charles Babbage
2) Blais Pascal
3) John Napier
4) George boole

04. பின்வருவனவற்றில் எது பச்சைத் தரவாகக் கருதப்படுகிறது?
1) வகுப்பில் மாணவர்கள் பெற்ற சராசரிப் புள்ளிகள்
2) வகுப்பில் மாணவர்கள் பெற்ற உயர்ந்தபட்சப் புள்ளிகள்
3) வகுப்பில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் வகைப்படுத்திய பட்டியல்
4) வகுப்பில் ஒரு மாணவன் பெற்ற புள்ளிகள்

05. கணினியின் பௌதிகக் கூறுகளை விரிவாகப் பயன்படுத்தப்படும் மிகவும் பொதுவான பதம்?
1) மன்பொருள்
2) வன்பொருள்
3) மென்பொருள்
4) நிலைபொருள்

06. முதல் தலைமுறை கணினிகளுக்கு அடிப்படையாக அமைந்தவை?
1) வெற்றிடக் குழாய்கள்
2) ஒன்றிணைந்த சுற்றுக்கள்
3) திரான்நிற்றாகள்
4) நுண்முறைவழியாக்கிகள்

07. வரிப்படத்தில் காணப்படும் கணினி வலையமைப்பில் இடத்தியல் யாது?
1) பாட்டை
2) விண்மீன்
3) வளையம்
4) மரம்



08. ஒரு சிறு பரப்பிற்கு எல்லைப்படுத்தப்பட்ட கணினி வலையமைப்பிற்கு வழங்கும் பெயர்?
1) LAN
2) WAN
3) VAN
4) MAN

09. Microsoft windows XP என்பது எதற்கு உதாரணமாகும்?
1) முறைமை மென்பொருள்
2) முறைமை பயன்பாடு
3) பிரயோக மென்பொருள்
4) வரைவியல் பயனர் இடைமுகம்

10. தற்காலத் தனியால் கணினியின் CPU வின் கடிகாரத் துடிப்பு வீதம்?
1) GHz 2) GB 3) Mbps 4) IPS

11. மடிமேல் கணினி பின்வரும் எவ்வகையில் வகைப்படுத்தப்படும்?
1) மீக்கணினி 2) சிறுகணினி 3) நுண்கணினி 4) தலைமைக்கணினி

12. கணினி முறைமையில் இடைமறிக்கப்படா வலு வழங்களைப் பயன்படுத்துவதன் பிரதான நோக்கம்?
1) முதல்மை வலு செயலிழக்கும்போது காப்பு வலுவை வழங்கல்
2) மின்னிலிருந்து கணினி முறைமையைப் பாதுகாத்தல்
3) கணினியின் சுற்றமைப்புக்கு நே.ஓ வலுவை வழங்கல்
4) கணினியின் உள்ளமை பற்றரியல் மின்னேற்றல்

13. கணினி விசைப்பலகையால text ஐ அடிப்பதன் மூலம் ஒருவருடன் தொடர்பாடலை ஏற்படுத்தக்கூடிய தொடரறா ஊடாட்ட முறை யாது?
1) E-mail 2) Chat 3) SMS 4) FTP

14. HTML இல் எழுதப்பட்ட வலைப்பக்கமொன்றினை திறப்பதற்கும் மூடுவதற்கும் அடையாள ஒட்டுக்கள் எவை?
1) <Xbody> </xbody>
2) <table></web>
3) <html></html>
4) <web></web>

15. Visual Basic இல் அடுத்த வரிக்கு செல்வதற்கு எந்தக் குறியீடு பயன்படுத்தப்படுகின்றது?
1) + (addition)
2) : (colon)
3) ; (semi colonon )
4) _ (underscore )

16. கீழேயுள்ள போலிக் குறியீட்டினால் பெறப்படும் வருவிளை யாது?
X=100 C=0 Repeat C=c+1 X=x+c UNTIL (c>2) PRINT X
1) 100 2) 101 3) 104 4) 106

17. Private sub command 1 click ( )
Dim A as integer
A=A+1
End sub
Private sub command 2. Click
Static B as integer
B=B+1
End sub
ஒவ்வொரு command ஐயும் இரண்டு தடவைகள் click செய்த பின்பு variable A இற்கும் B இற்கும் கிடைக்கும் பெறுமானங்கள் யாவை?
1) A=1, B=1 2) A=2,B=2 3) A=1,B=2 4) A=2,B=1

18. உறுப்பு 3 இனதும் உறுப்பு 7 இனதும் கூட்டுத்தொகை, உறுப்பு 8 இற்குச் சமப்படுத்தப்படுமாயின் அதனை பின்வரும் எந்தக்கூற்று வெளிப்படுத்துகின்றது?
1) Marks (7) =3+7
2) Marks (8) =3+7
3) Marks(8)= Marks(3)+ Marks(7)
4) Marks(7)= Marks(2) + marks (6)



19. பின்வருவனவற்றிலிருந்து கீழ்மட்ட புரோகிராமிங் செயல் நிரலாக்க மொழியைத் தெரிவு செய்க?
1) Visual 2) Java 3) Assemble 4) Cobol

20. பின்வருவனவற்றுள் ஒரு நிறுவனத்தின் அடிப்படை நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் அதனைப் பதிந்து வைப்பதற்கும் பயன்படுத்தப்படும் தகவல் முறைமை?
1) Transaction Processing system 2) Decision Support System
3) Management Information System 4) Intelligent Information System

21. இணையம் பற்றிய பின்வருவனவற்றில் எது பொய்யானது?
1) எவரும் இணையத்திற்கு உரிமையாளராக இருப்பதில்லை.
2) ஒருமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு எதுவும் இல்லை.
3) இது கணினி வலையமைப்புகளில் ஒரு வலையமைப்பாகும்.
4) கிடைக்கத்தக்க தகவல் எல்லாம் மிகவும் துல்லியமானவையும், நம்பகத்தகவுள்ளனவும் ஆகும்

22. இணையத்திற்கு நுழைவுச் சேவையை வழங்கும் கம்பனி ?
1) Server 2) ISP 3) Client 4) Teleshop

23. பின்வருவனவற்றில் எது தேடற் பொறி ஆகும்?
1) Google 2) Outlook Express 3) Internet Explore 4) Macromedia flash

24. UNIVAC என்பதன் விரிவாக்கம்?
1) Universal Automatic Computer 2) Universal Array Computer
3) Unique Automatic Computer 4) Unvalued Automatic Computer

25. எழுத்து பிழைக்கருவி எந்த கருவிப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது?
1) Standard 2) Formatting 3) Drawing 4) Reviewing

26. பின்வரும் மொழிகளில் ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டம் மிகவும் ஏற்றதாக உள்ளது?
1) PL/1 2) FORTRAN 3) BASIC
4) PASCAL 5) None of the above

27. குறியீட்டு வழிமுறைகளை பட்டியல் என அழைக்கப்படுகிறது?
1) Computer program
2) Algorithm
3) Flowchart
4) Utility programs
5) None of the above

28. Multiplication of $111_2$ by $101_2$ is
1) $110011_2$ 2) $100011_2$ 3) $111100_2$ 4) $000101_2$

29. கணினி வலையமைப்பில் கடவுச்சொல்லின் நோக்கம்?
1) எல்லா பயனாளிகளுக்கும் சம சிறப்புரிமை வழங்கல்
2) பொதுமக்கள் அதனுள்ளே நுழைவதற்கு பெறுவழியை அனுமதித்தல்
3) காப்பபையும் கட்டுப்பட்டுப் பெறுவழியை ஏற்படுத்தல்
4) கணினியின் செய்பணிகளை விரைவுபடுத்தல்

30. கணினியின் ஒரு குறிகிய நேரத்திற்கு நொய்தான அல்லது சீரற்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தவது?
1) முதுகு நோவை 2) குமட்டலை
3) உள்ள தகப்பை 4) கண் பிரச்சினைகளை

ICT & GIT மாணவர்களுக்கான MCQ வினா விடைகள் - கல்விமுரசு

# இராணுவத்தினரால் உயிர்காக்கப்பட்ட கஜேந்தினிக்கு யாழில் வரவேற்பு





யாழ்ப்பாண இராணுவக் கட்டளைப் பீடத்தின் ஏற்பாட்டில் இலவச இதய சத்திரசிகிச்சை மூலம் உயிர்காக்கப்பட்ட அச்சுவேலிப் பிரதேசத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் கஜேந்தினியை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வரவேற்கும் நிகழ்வு இராணுவத்தினரின் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கஜேந்தினிக்கு இதய சத்திரசிகிச்சை மேற்கொண்ட கொழும்பு ஆசிரி வைத்தியசாலையின் வைத்தியர்கள், நிதியுதவி புரிந்த வர்த்தகர் கிருபானந்தன், மருத்துவ முகாம் ஏற்பாடு செய்து கஜேந்தினியின் சிகிச்சைக்கு உதவிய அரிமா கழக தலைவர் வைத்திய கலாநிதி தியாகாராஜா உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதய நோயினால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே ஒரு தடவை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றும் பயனளிக்காத நிலையிலிருந்த தந்தையை இழந்த பெண்ணான கிருஷ்ணகுமார் கஜேந்தினி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அரிமா கழகத்தினருடன் இணைந்து இராணுவத்தினர் நடாத்திய இலவச இதய சிகிச்சை முகாமில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே அவருக்கு உடனடியாக இதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டும் என்று இனங்காணப்பட்டார்.

இவருக்குரிய இதய சத்திரசிகிச்சைக்குத் தேவையான வால்வு பலூனை வாங்குவதற்குத் தேவையான நான்கு இலட்சம் ரூபாவைத் தந்துதவுவதற்கு கிருபானந்தன் முன்வந்தார். சத்திரசிகிச்சைக்கு அவசியமான ஏனைய வைத்தியசாலைச் செலவுகளை இலவசமாக மேற்கொள்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் அனுமதியளித்தது. இதய சத்திரசிகிச்சையை எவ்வித கொடுப்பனவுமின்றி மேற்கொள்வதற்கு இந்திய சத்திர சிகிச்சை நிபுணர் குப்தா முன்வந்தார்.

கஜேந்தினியின் சத்திரசிகிச்சை நடைபெற்ற காலங்களில் இராணுவத்தினரின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி அடிக்கடி அவரை வந்து பார்த்து நலன் விசாரித்துச் சென்றதாகவும், அவருக்குத் தேவையான இரத்தத்தை 6 இராணுவத்தினர் வழங்கியதாகவும் தெரிவித்த அனில் பெரேரா, இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடு மெச்சத்தக்கது என்றும் பாராட்டினார். (சி)

# சட்டத்துறை மாணவர்களின் "நீதம்" நூல் வெளியீடு



(நிரு)

யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு இறுதியாண்டில் சட்டம் பயிலும் மாணவர்களால் 'நீதம்' என்ற நூல்கடந்த சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதிபதி சு.பரமராஜா, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கலைபட பீடாதிபதி என்.ஞானக்குமரன், பெரும் பொருளாளர் அ.வே.மணிவாசகர், ஜனாதிபதியின் சட்டத்தரணியும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவியுமான சாந்தா அபிமன்னசிங்கம், யாழ் நீதிமன்ற நீதிபதி என்.கணேசராசா, மல்லாக நீதிமன்ற நீதிபதி. கே.அரியநாயகம், மல்லாக நீதவான் கஜநிதிபாலன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ந்து, இந்த நிகழ்வின் பிரதம விருந்தினரான ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரன் கலந்துகொள்ளாதபோதும் அவரது வாழ்த்துச் செய்தி இந்நிகழ்வில் வாசிக்கப்பட்டது. ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ளது போன்று யாழ் பல்கலைக்கழகத்திலும் சட்டக்கல்வி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இங்கிருந்து பல வழக்கறிஞர்கள் உருவாகவேண்டும் என இங்கு உரையாற்றிய உயர் நீதிமன்ற நீதிபதி சு.பரமராஜா தெரிவித்தார்.

தொடர்ந்து 'நீதம்' நூல் வெளியீட்டு வைக்கப்பட்ட நூலின் முதற் பிரதியை ஜனாதிபதியின் சட்டத்தரணியும், சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான சா.அபிமன்னசிங்கம் பெற்றுக்கொண்டார். நூலின் மதிப்பீட்டுரையை சட்ட விரிவுரையாளர் கோசலை மனோகரன் நிகழ்த்தினார்.

இந்த நல் வெளியீட்டு நிகழ்வின்போது சட்டத்துறை மாணவர் சங்கத்தினரின் இணையத்தளமும் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், சட்ட பீடத்தினால் நடாத்தப்பட்ட வினாவிடை பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. (சி)

# 350 வருட பழமைவாய்ந்த ஒல்லாந்தர் கோட்டை



(கஜா)

சங்கானைப் பிரதேசத்தின் மிகப் பழமை வாய்ந்த ஒரு சின்னமாக சங்கானையிலிருந்து காரைநகர் செல்லும் வீதியில், ஜே-180 கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள ஒல்லாந்தர் கோட்டை திகழ்கிறது.

350 வருடங்கள் பழமை வாய்ந்த இந்தக் கோட்டை தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கீழ் டச்சு ஒல்லாந்தர்களால் கட்டப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இந்தக் கோட்டை பொன்னாலையிலிருந்து டச்சு ஒல்லாந்தர்கள் தோளிலே மண்சுமந்து வந்து அவர்களின் உடல் உழைப்பால் கட்டப்பட்டதாகவும், புன்னாலைப் பிள்ளையார் கோவிலினை இடித்து அந்த இடிபாடுகளைப் பயன்படுத்தியே அமைக்கப்பட்டதாகவும் இரண்டு விதமாக வரலாறுகள் கூறுகின்றன.

கோட்டையின் உள் மண்டபம் முருகைக் கற்களால் அமைக்கப்பட்டிருந்ததுடன், முன் மண்டபம் மேற் கூரை அற்ற நிலையில் அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன், வெளிமண்டபப் பகுதியில் 9 யன்னல் அமைப்பும், முன் மண்டபப் பகுதியில் 2 யன்னல் அமைப்பும், முன் மண்டப இடது பக்க சுவரின் இடது பக்கமாக கதவமைப்பும் காணப்பட்டது. ஆனால் இன்று இவ்வாறான ஒரு அமைப்பற்ற நிலையில் அழிவடைந்து காணப்படுகின்றது. (சி)

# பதிவிருக்கப் பெட்டகம்

அணு உலைகள் ஆபத்தானவை. அவற்றால் எந்தப் பெரும் பயனும் வளர்ச்சியும் நடப்பதில்லை என்ற உண்மையை கூடங்குளத்தின் பாமர மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். படித்தவர்களின் சூது அவர்களை இப்போது முறியடித்துவிட்டது. காந்திய அறவழியில் போராடும் மக்களிடம் தானும் அறவழியில் பேசுவதே சரியென்று ஏன் அரசுகளுக்கு உறைப்பதே இல்லை? அமைதியாக வாழவும் அமைதியாக போராடவும் விரும்பும் மக்களை ஆயுதக் கலாசாரத்தை நோக்கி தள்ளுவது அரசுதானே? அதுதானா அரசின் உண்மை விருப்பம்? காந்தியைக் கொல்வதுதான் அரசின் நிரந்தர திட்டமா? காந்தி இந்தியாவில் ஒரு முறை மட்டும் கொல்லப்பட்டவர் அல்ல. திரும்பத் திரும்பக் கொல்லப்படுகிறார். இந்த முறை கோட்சேவின் இடத்தில் மன்மோகனும் ஜெயலலிதாவும்.

**– ஞாநி**

அவ்வளவு அறிவாளியாகவும் புத்திசாலியாகவும் இருக்கும் ஒருவர், ஒரே தெருவில் இரண்டு திசைகளிலும் நடந்து செல்ல முடியும் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறியது வியப்புக்குள்ளாக்குகிறது.

**– நிழல்களின் உரையாடல்**

2010 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது பதவிககாலத்திற்கு மக்களின் ஆணையைக் கேட்டுநின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகா உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்திற்குத் தலைமை தாங்கியவர் என்பதைக் கூட கருத்தில் எடுக்காமல் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் கூட தமிழ் மக்கள் அதிகப் பெரும்பான்மையாக அவரை ஆதரித்தார்கள். இறுதிக் கட்டப் போர் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் அநேகமாக 2008 பிற்பகுதியில் என்று நினைக்கிறேன், பொன்சேகா கனடிய பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியில் இலங்கையில் சிறுபான்மையின மக்கள் வேண்டுமானால் வாழ்ந்துவிட்டுப் போகலாம், ஆனால், பிரத்தியேகமான உரிமைகள் என்று எதனையும் கோருவதற்கான அருகதை அவர்களுக்கு இல்லை. இது சிங்களவர்களின் நாடு என்று கூறியிருந்தார். அத்தகைய ஒருவரை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டியேற்பட்டமை உண்மையிலேயே அவர்களை வரலாறு வஞ்சித்த ஒரு இருண்ட சந்தர்ப்பமாகவே நான் பார்க்கிறேன்.

**– வீ.தனபாலசிங்கம்**

ஒருவர் டொக்டரிடம் போனாராம். "டொக்டர் எனக்கு மூக்கைத் தொட்டால் நோகிறது. வயிற்றைத் தொட்டால் நோகிறது. முழங்காலைத் தொட்டால் நோகிறது. முதுகைத் தொட்டால் நோகிறது உடம்பில் எங்கே தொட்டாலும் நோகிறது". டொக்டர் பரிசோதித்துவிட்டுச் சொன்னாராம். "உனக்கு ஒரு இடமும் நோவில்லை. உன் சுட்டுவிரலில்தான் நோ இருக்கிறது" என்று.

நாங்கள் உலகத்தில் ஒருவர் மிச்சமில்லாமல் துரோகமிழைத்து விட்டார்கள் என்று பெரும் பட்டியலே போடுகிறோம். யகூசி அகாசியை மட்டுமல்ல, அசினையும் நாங்கள் விட்டு வைக்கவில்லை. ஆனால் எங்களில் தவறு இருக்கும் என்ற உண்மையை நாங்கள் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை. யார் மீதாவது பழியைப் போட்டு, அவர்கள் துரோகம் இழைக்கவில்லையென்றால் எங்களுக்கு ஈழம் கிடைத்திருக்கும் என்று பிதற்றிக் கொண்டிருக்கிறோம்.

**– தாயகம்**


அடோல்ப் ஹிட்லரிடம் நான் ஈர்ப்பு கொண்டிருந்ததை ஒப்புக்கொள்கிறேன். அவர் இனிய குணம் கொண்டவராகவும் தந்தைமை மிக்க நண்பராகவும் இருந்தார். நான் என்னுள் ஒளிந்து கொண்டிருந்த எச்சரிக்கைகளை நிதானமாக ஒதுக்கிவிட்டு, ஹிட்லரது கசப்பான இறுதிக் கணம் வரை மகிழ்வுடன் அவரது அருகில் இருந்தேன்.

**– ட்ராடுல் ஜங்க் (ஹிட்லரின் தட்டச்சு உதவியாளர்)**

ஹிட்லர் வசீகரிக்கும் தன்மை படைத்த மனிதர் என்பதையே பல்வேறு தகவல்களும் சொல்கின்றன. மிகப் பாரிய மனித அழிவுக்குக் காரணமாக இருந்தவர்கள், பழகும் முறையிலோ, தம்மை நெருங்கியிருப்பவர்களிடமோ குரூரமானவர்களாகத் தோன்றுவதில்லை. கெட்ட பழக்கங்களாக எதுவுமில்லாதவராகக் குறிப்பிடப்படும் – தன்னவர்களுக்கு அன்பும் தந்தைமையும் நட்புமுடையவராகத் தெரிந்த ஹிட்லர், ஒரு நாகரிகமான சமூகத்தைக் காட்டுமிராண்டித்தனமாக எவ்விதம் மாற்றினார் என்பதே நாம் அறிய வேண்டிய செய்தி.

**– அ.மார்க்ஸ்**

# அப்துல் கலாம் மீண்டும் இந்திய ஜனாதிபதி



(புதுடில்லி)

இந்திய ஜனாதிபதியாக அப்துல்கலாமை மீண்டும் பதவியில் அமரச்செய்ய அ.தி.மு.க., சமாஜ்வாடி கட்சி (முலாயம்சிங்), திரிணாமுல்காங். (மம்தா) ஆகி யோர் சம்மதம் தெரிவித்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரம் தெரிவிக்கிறது.

எதிர்வரும் ஜூலை மாதத்துடன் ஜனாதிபதி பிர-தீபா பாட்டில் பதவிக்காலம் முடிவுக்கு வருகிறது. இதனையடுத்து நடக்கவிருக்கும் தேர்தலில் யாரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கலாம் என காங்கிரஸ் வட்டாரத்தில் பரபரப்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே., அந்தோணி, அமீது அன்சாரி ஆகியோரது பெயர்கள் பரிசீல-னையில் உள்ளன.

இதற்கிடையில் விஞ்ஞானி அப்துல்கலாமை மீண்டும் ஜனாதிபதியாக்கிட அ.தி.மு.க., சமாஜ்வாடி, திரிணாமுல் காங்கிரஸ் விரும்புகின்றன. இவரை நிறுத்தினால் வாக்குப்போட தயாராக இருப்பதாகவும், ஒத்துக்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. பா.ஜ. காலத்தில் கலாம் ஜனாதி-பதியாக இருந்து நற்பெயர் பெற்றவர் என்பதாலும், சிறுபான்மைச் சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதாலும், அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்பதாலும் இவருக்கு மேலும் ஆதரவு பெருகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மகாராஷ்ட்டிரா முன்னாள் முதல்வரும், தற்போதைய மத்திய எரிசக்தித் துறை அமைச்சருமான சுஷீல்குமார் ஷிண்டேவும் இந்தத் தகவ-லை உறுதி செய்துள்ளார். கலாமை ஜனாதிபதியாக்கிட மேற்கூறிய கட்சிகள் மத்தியில் கருத்தொற்றுமை நிலவியிருப்பதாகக் கூறினார். ஆளும் கூட்டணியில் உள்ள தேசியவாதக் கட்சித் தலைவரும், மத்திய அமைச்சருமான சரத்பவாரும் அரசியலுக்கு அப்பாற்பட்டவர் ஜனாதிபதியாக வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கடும் வெய்யில் இருவர் பலி

(நகரி)

சித்தூர் மாவட்டத்தில், வெயில் கொடுமையால் இருவர் உயிரிழந்தனர். நகரி அடுத்த பரமேஸ்வரமங்கலம் தலித் காலனியைச் சேர்ந்தவர் பாபு (வயது-32). கூலிவேலை செய்து கொண்டிருந்தபோது, வெயிலின் தாக்கத்தால், திடீ-ரென மயக்கமடைந்தார். உடனே, அருகில் இருந்த அரச மருத்துவமனைக்கு, சிகிச்சைக் காக கொண்டு சென்றபோது, வழியில் உயிரிழந்தார். இதே போல், சத்தியவேடு அடுத்த வரதய்யபாளையம் அருகில், கடூரைச் சேர்ந்த ராஜம்மாள் (வயது - 60). வெயிலின் கொடுமை தாங்காமல் திடீ-ரென மயக்கமடைந்தார். சிகிச்சைக்காக அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தியச் செய்திகள்

# குழந்தைத் திருமணத்தை தடுத்த அதிகாரிகள்; கற்களால் அடித்து விரட்டிய மக்கள்

குழந்தைத்திருமணத்தை தடுக்க முயன்ற அதிகா-ரிகள், தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்றுள்ளது. ராஜஸ்தான் மாநிலம் ஜலவார் மாவட்டத்தில் உள்ள பிரித்திவிபுரா கிராமத்தில் 42 ஜோடிக் குழந்தைகளுக்கு திருமணம் நடைபெறுவதாக அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் ஒன்று வந்தது.

இதனையடுத்து மாவட்ட நிர்வாக அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் திருமணத்தை தடுத்து நிறுத்த முயன்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அக்கிராம மக்கள் அதிகாரிகள் மீது கற்கள் வீசி தாக்குதல் நடத்தினர். பின்னர் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. இச்சம்பவம் குறித்து அக்கிராம மக்கள் மீது வழக்குப் பதிவு



செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சத்தியசாயி சமாதி அடைந்த தினம் இன்று

(புட்டபர்த்தி)

சத்ய சாய்பாபாவின் முதலாம் ஆண்டு நினைவு நாளான இன்று புட்டபர்த்தியில் உள்ள மகா சமாதியில் மகா ஆராதனை மற்றும் சாய்பாபா பற்றிய புத்தக வெளியீட்டு விழா நடைபெறு-கிறது. இந்த நிகழ்ச்சியில் ஆந்திர மாநில கவர்னர் எல்.நரசிம்மன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும், உலகமெங்கும் இருந்து வருகைதந்துள்ள சாய்பாபா பக்தர்களும் கலந்துகொள்கின்றனர்.

இங்கு "தெய்வத்துடனான அனுபவம்" என்ற தலைப்பில் பல்வேறு முக்கிய பிரமுகர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்வர். பத்மஸ்ரீ டாக்டர் ஜி.வெங்கட்ராமன் எழுதிய பகவான் சத்ய சாய்பாபா பற்றிய புத்தக வெளியீட்டு விழா நடைபெறும்.

# இலங்கை அகதிகளின் தொடரும் உண்ணாநிலை


செங்கல்பட்டு சிறப்பு முகாம் வாசிகளின் உண்ணா விரதப் போராட்டம் 10ஆவது நாளாக தொடர்கின்றது. உண்ணாநிலை இருந்து வரும் 13 பேரும் மிகவும் சோர்வாகக் காணப்படுகின்றனர். ஆனாலும், விடுதலைக் கோரிக்கையில் உறுதியாக உள்ளனர். நேற்றுமுன்தினம் விக்கிரமசிங்கம் மற்றும் சிறீ செயன் ஆகியோர் 90 அடி உயரத்தில் உள்ள மரத்திலேறி, அரசு விடுதலைக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும், இல்லையேல் மரத்திலிருந்து குதித்து தற்கொலை செய்வோம் என கோஷமிட்டனர்.



அதேசமயம், முகாமிற்கு வெளியே சிறப்பு முகாமில் உள்ள அகதிகளின் கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றச் செய்வோம் என கொடுத்த உறுதி மொழியை அடுத்து, மரத்திலிருந்தவர்கள் தற்கொலை அறிவிப்பை தற்போதைக்கு தள்ளி வைப்பதாக ஏற்றுக் கொண்டனர்.

இதனிடையே, முகாமில் உள்ள அகதிகள், அரச கோரிக்கைகளை நிறைவேற்றாத வேளையில், அடுத்த கட்டப் போராட்டத்திற்கு தயாராகி வருகின்றனர். இன்று சந்திரகுமார் (வயது - 55) நீர் ஆகாரம் எதுவும் எடுத்துக் கொள்ளாமல், கோரிக்கை நிறைவே-றும் வரை உண்ணாநிலையை மேற்கொள்ளவும், நாளை முதல் உண்ணாநிலை மேற்கொண்டு வரும் சிறீ செயன் திரும்பவும், முகாமினுள் உள்ள மரத்தில் ஏறி தற்கொலைப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இதேவேளை விடுதலைக் கோரிக்கைகளை முன் வைத்து உயிருக்கு போராடும் அகதிகளை கண்டும் காணாததுமாக தமிழக ஊடகங்கள் இருப்பதாக தெரியவருகின்றது.

# அன்னா ஹசாரே குழுவில் உளவாளி?




(நொய்டா)

அன்னா ஹசாரே குழுவிலிருந்த, ஒரே முஸ் லிம் உறுப்பினரான முப்தி ஷமீம் காஸ்மி நீக் கப்பட்டார். கூட்ட நிகழ்வுகளை இரகசியமாக பதிவு செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

டில்லி அருகே நொய்டாவில், காந்தியவாதியும், சமூக ஆர்வலருமான அன்னா ஹசாரே குழுவின் உயர் நிலைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. கூட்டத்தில் ஹசாரே கலந்துகொள்ள இருக்கும் பல்வேறு போராட் டங்கள், நிகழ்ச்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக் குழுவின் உறுப் பினர்களில் ஒருவராக, முப்தி ஷமீம் காஸ்மி என்பவரும் உள்ளார். இவர் கூட்டத்தில் பேசப்பட்ட பல்வேறு முக்கிய முடிவுகள் குறித்து இரகசியமாக தனது கைத்தொலைபேசியில் பதிவு செய்துகொண்டிருந்தார். அதைப் பார்த்த சில உறுப்பினர்கள் அவரிடம், "ஏன் இவ்வாறு பதிவு செய்கிறீர்கள்?" எனக் கேட்டனர். உடனே சுதாரித்துக்கொண்ட அவர் அங்கிருந்து வெளி யேறி விட்டார். இதனையடுத்து, அன்னா ஹசாரே அவரை வெளியேற்றுமாறு கூறியுள்ளார்.

மேலும் இது இது நம்பிக்கைத் துரோகம் எனத் தெரிவித்தார். அவர் இரகசியமாக பதிவு செய்தவற்றை பத்திரிகையாளர்கள் சிலருக்கு அனுப்பிக் கொண்டிருந்தார் என ஹசாரே குழுவைச்சேர்ந்த சிலர் தெரிவித்தனர்.

இந்நிலையில், குழுவில் இருந்து நீக்கப்பட்ட முப்தி ஷமீம் காஸ்மி நிருபர்களிடம் கூறுகையில், "ஹசாரே குழுவில் இருந்த ஒரே முஸ்லிம் உறுப்பினர் நான்தான். அவர்களுக்கு முஸ்லிம் உறுப்பினர்கள் தேவையில்லை. அதனால் என்னை வெளியேற்றி உள்ளனர். அன்னா ஹசாரே நல்லவர். அரவிந்த கெஜ்ரிவால் மற்றும் மனிஷ் சிசோடியா ஆகியோர் இக்குழுவை தங்கள் விருப்பம் போல் நடத்தி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.




# எம்.ஜி.ஆருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர் மரணம்

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் கழுத்தில் பாய்ந்த தோட்டாவை அகற்றி வைத்தியம் பார்த்த பிரபல வைத்தியர் சத்திய நாராயணா, கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு உடல் நலக்குறைவு காரணமாக மரணமடைந்தார். கடந்த 1967ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி சக நடிகர் எம்.ஆர். ராதாவால் எம்.ஜி.ஆர். சுடப்பட்டார்.

கழுத்தில் குண்டு பாய்ந்த அவரை அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். பிரபல வைத்தியர்கள் பலரும் எம்.ஜி.ஆருக்கு அறுவை சிகிச்சை செய்ய தயங்கி ஒதுங்கியிருந்தனர். அச்சமயம் சத்திய நாராயணா இதை சவாலாக எடுத்துக் கொண்டு, எம்.ஜி.ஆருக்கு அறுவை சிகிச்சை செய்து கழுத்தில் இருந்த துப்பாக்கி தோட்டாவை அகற்றினார். நன்கு குணம் அடையும் வரை எம்.ஜி.ஆருக்கு இவரே சிகிச்சை அளித்தார்.

கடந்த சில வாரங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இவர், நான்கு நாட்களுக்கு முன்னர் மரணமடைந்தார்.

# பதவி ஏற்க சூகி மறுப்பு

மியான்மரில் நடந்த இடைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற ஆங் சாங் சூகியும், அவரது கட்சித் தோழர்களும் பதவியேற்க மறுத்துள்ளனர். பதவியேற்பு உறுதிமொழியில் உள்ள் வாசகங்களை மாற்றும்படி கோரியதை இராணுவ ஆட்சியாளர் தெய்ன் செய்ன் ஏற்க மறுத்துவிட்டதால் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பதவியேற்பை தள்ளி வைத்திருக்கிறோமே தவிர, ஒரேயடியாகப் புறக்கணித்து விடவில்லை என்று கட்சியின் பத்திரிகைத் தொடர்பாளர் ஆன் கைங் விளக்கம் அளித்துள்ளார். தற்போது உள்ள அரசியல் சட்டமானது இதற்கு முன்பு பதவியில் இருந்த இராணுவ ஆட்சியாளர்களால் வகுக்கப்பட்டது. உலகின் எந்த நாட்டிலும் இல்லாத வகையில் நாடாளுமன்றத்தின் 25% இடங்கள் இராணுவத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அந்த இடங்களுக்கும் தேர்தல் இல்லாமல் இராணுவத் தலைமையே உறுப்பினர்களை நியமித்துக்கொள்ளும். இப்படியொரு நாடாளுமன்றத்தை ஏற்படுத்தியிருக்கும் அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பேன் என்று ஒவ்வொரு உறுப்பினரும் உறுதிமொழி எடுக்க வேண்டும் என்பதை ஏற்க முடியாது என்று சூகி மறுத்திருக்கிறார். அதற்குப் பதிலாக 'அரசியல் சட்டத்தை மதித்து நடப்போம்' வேண்டுமானால் மாற்றுங்கள் என்று கூறியிருக்கிறார்.

இதற்கு இராணுவத் தலைமை மதிப்பது முக்கியம் இல்லை, காப்பது, அதன்படி நடப்பது தான் முக்கியம் என்று உறுதியாகக்கூறிவிட்டது. தங்களுடைய தரப்பு நியாயத்தை



இராணுவத்தலைமை ஏற்கும் என்ற நம்பிக்கை இருப்பதால் பதவியேற்பை ஒத்தி வைத்திருப்பதாக ஆங் சாங் சூகி கூறியிருக்கிறார்.

மேலும் இனி அடுத்த முடிவு என்ன என்பதை கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்திய பிறகு அறிவிப்பதாக சூகி தெரிவித்துள்ளார்.

# ஆளில்லா விமானத் தயாரிப்பில் ஈரான்

ஆளில்லா விமானங்களைத் தயாரிக்கும் பணியில் ஈரான் தற்போது ஈடுபட்டு வருகிறது. இத்தகவலை அந்நாட்டு விமானப் படை அதிகாரி அமிர் ஹாஜி ஜடே தெரிவித்துள்ளார். கடந்தாண்டு டிசம்பரில் கிழக்கு ஈரானில் தாக்குதல் நடத்த வந்த அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தை ஈரான் படையால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதனை ஆய்வு செய்தே, புதிய ஆளில்லா விமானத்தயாரிப்பில் ஈரான் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது. அமெரிக்கா ஆளில்லாத விமானங்களை பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லையில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை தாக்குவதற்கு பயன்படுத்தி வருகிறது. குறிப்பிட்ட இலக்கை குறிவைத்து தாக்குதல் நடத்த பயன்படும் இந்த வகை விமானங்கள், இரகசியத்தகவல்கள் சேகரிப்புக்கும் பயன்படுத்தப்படுகிறது. தற்போது இலங்கைக் கடல் எல்லையில் இந்தியாவும் கண்காணிப்புக்காக இவ்வகையான விமானங்களைப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# அமெரிக்க ஆப்கான் நாடுகளிடையே மூலோபாய கூட்டு உடன்படிக்கை



அமெரிக்க மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மூலோபாய கூட்டு உடன்படிக்கை தொடர்பாக இணக்கம் கண்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிநாட்டுப் படையினர்கள் முற்றாக வெளியேறிய பின்னர் இந்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கடந்த மாதங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் காபூலில் வைத்து இந்த உடன்படிக்கையில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்டு ஜனாதிபதிகளாலும் மீளாய்வு செய்யப்பட்ட குறித்த உடன்படிக்கையிலுள்ள விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை எனத் தகவல் தெரிவிக்கின்றன.ஆப்கான் படைகளின் பராமரிப்பிற்காக இரண்டு பில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்கா எழுத்து மூலம் உறுதியளித்துள்ளதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமிட் கர்சாய் கூறியிருந்தார்.

# பங்களாதேஷில் கலவரம்; இருவர் பலி

பங்களாதேஷில் எதிர்க்கட்சித் தலைவர் மாயமானதைத் தொடர்ந்து கலவரம் ஏற்பட்டது. வங்க தேச வடமேற்குப் பகுதியில் செல்வாக்கு மிகுந்த கட்சியாக 'வங்கதேச தேசியவாதக் கட்சி' செயற்பட்டு வருகிறது.

இக்கட்சியின் தலைவர் இலியாஸ் அலி, கடந்த 5ஆம் திகதிக்கு முன்பு மாயமானதாக கூறப்படுகிறது. தலைவர் இலியாஸ் அலியை வங்கதேச பொலிஸார் பல பகுதிகளிலும் வலைவீசி தேடிவந்தனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாயக்கிழமை தலைநகர் டாக்கா அருகே அலியின் காரை கண்டு பிடித்தனர். மேலும் அவருடைய கார் ஓட்டுநர் காணாமல் போயுள்ளது குறித்தும் கண்டறிந்தனர்.

இதற்கிடையில் ஆளும் கட்சி இலியாஸ் அலியின் வழக்கில் மெத்தனமாக இருப்பதாகக் கூறி தேசியவாத கட்சித் தொண்டர்கள் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலவரத்தில் ஈடுபட்டனர்.



இந்தக் கலவரத்தை கலைப்பதற்காக வங்கதேச பொலிஸார் ரப்பர் வெடிகுண்டு மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி கூட்டத்தை கலைத்தனர். இச்சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததாக பங்களாதேஷ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு; அவுஸ்ரேலிய சபாநாயகர் பதவி விலகினார்




பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள அவுஸ்ரேலிய நாடாளுமன்ற சபாநாயகர் பீற்றர் ஸ்லிப்பர் பதவி விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அவரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. பொதுமக்களின் வரிச் சேவை நிதியை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக ஸ்லிப்பரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ள நிலையில், அவர் பதவி விலகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உணர்வுகளைத்தூண்டும் வகையில், சபாநாயகர் தமக்கு ஆபாச தொலைபேசி குறுந் தகவல்களை அனுப்பியுள்ளதாக ஸ்லிப்பரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் முன்னாள் நாடாளுமன்ற உத்தியோகத்தர் ஜேம்ஸ் அஸ்பி குற்றஞ்சுமத்தியுள்ளார்.

எனினும், தமக்கெதிரான அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நாடாளுமன்ற சபாநாயகர் பீற்றர் ஸ்லிப்பர் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலிய பெடரல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தமக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணையின் தீர்ப்புக் கிடைக்கும் வரை ஸ்லிப்பர் சபாநாயகர் பதவியில் இருந்து விலகியுள்ளதாக செய்தி வெளிவந்துள்ளது. இந்தச்சம்பவம் பிரதமர் ஜூலியா கிலாட்டின் அரசாங்கத்தின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முதற்கட்ட வாக்கெடுப்பில் சர்கோஷி தோல்வி




பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் சோசலிசக் கட்சி வேட்பாளர் பிரன்சுவா ஒலண்ட் முன்னிலை பெற்றுள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் கட்ட வாக்கெடுப்பில் 28 வீத வாக்குகளைப் பெற்றுள்ளதுடன், தற்போதைய ஜனாதிபதி நிக்கலஷ் சர்கோஸி 26 வீத வாக்குகளையே பெற்றுள்ளார்.

அடுத்த மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ள இராண்டாம் கட்ட வாக்கெடுப்பில் இருவருக்கும் இடையில் பலத்த சவால் நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வலதுசாரி வேட்பாளர் மரீன் லெப்பென் 19 வீத வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தினைப் பிடித்துள்ளார்.இந்த வாக்கெடுபபில் பொருளாதார நெருக்கடிகள் முக்கிய தாக்கத்தினைச் செலுத்தியுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் குறிப்படுகின்றன. 1958 ஆம் ஆண்டிற்கு பின்னர் பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் மீண்டும் போட்டியிட்டு முதல் கட்ட வாக்கெடுப்பில் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வேகமாக நகரும் உலகில் தமது நாட்டில் உணரப்பட்ட கவலையை தாம் புரிந்து கொண்டுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சார்கோஸி குறிபபிட்டுள்ளார்.

# சூடானில் மீண்டும் போர் மூழுமா?




கோடைகாலம் தொடங்கியுள்ள நிலையில், மியான்மர் யாங்கூனில் உள்ள ஏரியிலிருந்து குடிநீரை எடுத்துச் செல்ல மக்கள் பிளாஸ்டிக் வாளியுடன் வரிசையில் நிற்கின்றனர்.

சூடான் எல்லையில் உள்ள சர்ச்சைக்குரிய பகுதியில் இருந்து, தெற்கு சூடான் தனது படைகளை முற்றிலுமாக வாபஸ் பெற்றுள்ளது. சூடான் நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாக நீடித்து வந்த உள்நாட்டுச் சண்டையில் 15 இலட்சம் பேர் பலியாயினர். ஐ.நா தலையீட்டின் பேரில் கடந்தாண்டு தெற்கு சூடான் தனி நாடாக உருவானது. சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தினர் தற்போது தெற்கு சூடானை ஆட்சி செய்து வருகின்றனர்.

இருநாட்டு எல்லையில் உள்ள ஹெக்லிக் என்ற இடத்தில் எண்ணெய் வளம் அதிகமாக உள்ளது. இதை தங்களிடம் ஒப்படைக்கும்படி சூடான் அரசு தெற்கு சூடானை எச்சரித்து வந்தது. இதற்கு தெற்கு சூடான் மறுப்பு தெரிவித்ததால் இருநாடுகளுக்கிடையே சமீபத்தில் சண்டை நடந்தது.

இந்தச் சண்டையில் இருதரப்பிலும் 22 வீரர்கள் பலியாயினர். ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படையை வாபஸ் பெறவில்லையென்றால், அந்நாட்டுடன் போர் நடக்கும் என சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பீர் தெரிவித்திருந்தார். சண்டை நடந்தால் தெற்கு சூடானுக்கு ஆதரவளிப்போம் என உகண்டா தெரிவித்திருந்தது. நிலைமை மிக மோசமடைவதைக் கண்ட ஐ.நா பொது செயலர் பான் கி மூன், சர்ச்சைக்குரிய ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் எனக் கூறியிருந்தார்.

சர்வதேச வரைபடத்தின் படி ஹெக்லிக் சூடான் வசம் தான் உள்ளது. இருப்பினும் இந்தப் பகுதி தங்களுக்கு தான் சொந்தம் என தெற்கு சூடான் உரிமை கொண்டாடி வருகிறது. இந்தப் பகுதி இன்னும் சரியாக வரையறுக்கப்படாத காரணத்தால் சர்ச்சை நீடிக்கிறது. சூடான் நாட்டுடன் நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, மூன்று நாட்களுக்குள் தன்னுடைய படைகளை வாபஸ் பெறுவதாக தெற்கு சூடான் ஜனாதிபதி சால்வா கிர் உறுதியளித்துள்ளார். ஜனாதிபதி சல்வா கிரின் உத்தரவுப் படி படைகளை முற்றிலும் வாபஸ் பெற்று விட்டதாகவும், இருப்பினும் சூடான் படையினர் தொடர்ந்து குண்டு வீசி வருவதாகவும் தெற்கு சூடான் இராணுவத் தளபதி புகார் தெரிவித்துள்ளார்.




**'ஹாய்** மாலினி, நான் சொல்லியே ஆகணும். நீ அவ்வளவு அழகு...' என்று சிம்ரனிடம் சொன்ன வசனத்தைத் தம் எதிரே அமர்ந்து கண்கொட்டப் பார்க்கும் ஒரு பெண்ணிடம் சொல்கிறார் சூர்யா.

'என்னுடன் சேர்ந்து நீங்க ஒரு டான்ஸ் ஆடணும்' என்றால் மறுப்பே இல்லாமல் கைகோத்து நடனமாடுகிறார். 'எங்கம்மாவிடம் உங்களை மாதிரி ஒரு பையனைப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன்' என்று ஒரு பெண் சூர்யாவிடம் மனம் திறக்கிறார்.

'ஜோதிகா அவ்வளவு அருமையா தமிழ்ல பேசுவாங்க. நமக்குத்தான் இன்னும் ஹிந்தி செட் ஆக மாட்டேங்குது' என்று சூர்யாவும் சொந்த விஷயங்களைப் பகிர்ந்துகொள்கிறார். இவ்வளவும் ஓர் அறிவுபூர்வமான நிகழ்ச்சியின் நடுவே தினமும் நடந்து கொண்டிருக்கிறது.

விஜய் டி.வி.யில் நடிகர் சூர்யா நடத்தும் 'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி!'

க்விஸ் நிகழ்ச்சிகளில், வெறும் புள்ளிவிபரங்களைக் கோரும் வறட்டுக் கேள்விகள் மட்டும் போதாது. அதையும் தாண்டிய ஒரு கொக்கியைக் கொண்டு பார்வையாளர்களை இழுக்கவேண்டும் என்று உலகுக்கு முதலில் புரியவைத்த க்விஸ் நிகழ்ச்சி, இங்கிலாந்தில் மட்டுமில்லாமல் 116 நாடுகளில் 83 மொழிகளில் ஒளிபரப்பாகும், Who wants to be a millionaire?. இன்று, தமிழுக்கும் வந்திருக்கும் இந்த ஜனரஞ்சகமான க்விஸ் நிகழ்ச்சியின், வரலாற்றில்தான எத்தனை சுவாரசியங்கள், சர்ச்சைகள்!

**முதல் நிகழ்ச்சி**

**முதல் முறைகேடு:**

Who wants to be a millionaire?, க்ரோர்பதி, நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி போன்றவற்றின் முன்மாதிரி, அமெரிக்க டி.வி நிகழ்ச்சி


அமிதாப் பச்சன்

யான The $ 64,000 Question.

1950களில், அமெரிக்காவில் 85 சதவிகிதத்துக்கும் மேலான மக்களிடம் டி.வி இருந்தது. அப்போது அமெரிக்கா, ரஷ்யாவுடன் தொழில் நுட்பத்தில் கடுமையாகப் போட்டி போடடுக் கொண்டிருந்த நேரம். நிரம்பி வழிந்த அறிவுத்தாகத்துக்கு, 1955இல ஒளிபரப்பான 'அறுபத்து நான்கு ஆயிரம் டொலர் கேள்வி' என்கிற க்விஸ் நிகழ்ச்சி ஈடுகொடுத்தது.

இந்த நிகழ்ச்சிகளில் கேட்கப்பட்ட கேள்விகள் அறிவு ஞானத்தைத் தூண்டுவதாக அமைந்தன. மண்டையில் சரக்கு இருந்தால் சுலபத்தில் பணத்தை அள்ளலாம் என்பதே அமெரிக்கர்களுக்குப் புல்லரிப்பாக இருந்தது.

ஒரு காலத்தில் நாம் ஒலியும் ஒளியுமுக்கு ஆலாய்ப் பறந்தது போல 'அறுபத்து நான்கு ஆயிரம் டொலர்' ஒளிபரப்பானபோது, தியேடடர், உணவு விடுதிகள் கூட்டம் இல்லாமல் அல்லாடின. அப்போது, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஐசனோவர் இந்த நிகழ்ச்சியின் பெரிய ரசிகர்.

இந்த தடாலடி வரவேற்பால், அமெரிக்க சனல்களில் நிறைய க்விஸ் நிகழ்ச்சிகள் முளைக்க ஆரம்பித்தன. போட்டிகளில் வென்றவர்கள் சினிமா நட்சத்திரம் அளவுக்குப் பிரபலமானார்கள். எங்கு சென்றாலும் கையெழுத்து வாங்க ரசிகர்கள் துரத்தினார்கள். இந்தச் சமயத்தில்தான் மேட்ச் ஃபிக்ஸிங், ஸ்பொட் பிக்ஸிங் எல்லாம் தொடங்கின.

"Twenty One" என்கிற சி.பி.எஸ் சனலின் க்விஸ் நிகழ்ச்சியில் ஸ்டெம்பல் என்கிற போட்டியாளர் தொடர்ந்து ஜெயித்துக்கொண்டு வந்தது பார்வையாளர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவரைத் தோற்கடிக்க ஒரு சதித் திட்டம் தீட்டினார் நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் அல்பேர்ட் ஃப்ரீட்மன். அவருடைய திட்டத்துக்கு சார்ள்ஸ் வான் டோரென் என்கிற பேராசிரியர் பகடைக்காயானார். டோரெனுக்குக் (விடைகளுடன் கூடிய) கேள்வித்தாளை லீக்அவுட் செய்தார் ஃப்ரீட்மேன்.

ஸ்டெம்பலும் டோரெனும் கலந்துகொண்ட நிகழ்ச்சியின்போது அமெரிக்கச் சாலைகளில் ஆள்நடமாட்டமேயில்லை. திட்டமிட்டபடி, டோரென் ஸ்டெம்பலைத் தோற்கடித்தார். ஆனால், நாளாக ஆக, நிகழ்ச்சியின் தராதரம் பற்றி வெளியே கசிய ஆரம்பித்தது.

1958இல், டி.வி க்விஸ் நிகழ்ச்சிகளில் நடக்கும் ஏமாற்றுவேலைகள் பற்றி டெய்லி மிரர், ஜேர்ணல் அமெரிக்கன் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தபோது அமெரிக்கப் பார்வையாளர்கள் அதிர்ச்சியாகி, நிகழ்ச்சிகள் மீதான ஈடுபாட்டைக் குறைத்தனர். முறைகேடுகள் பற்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அத்தனை பேரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள். பலர் பொய்யான வாக்குமூலத்தை அளித்தாலும், போதுமான ஆதாரங்கள் இருந்ததால் தவறு செய்த அத்தனை பேருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

பல வருடங்கள் கழித்து, டோரென தன் தவறை ஒப்புக்கொண்டார். 'நிகழ்ச்சியில் நான் எப்படிப் பதில் சொல்லவேண்டும், எப்படியெல்லாம் நடிக்கவேண்டும் என்று சகலமும் கற்றுக்கொடுக்கப்பட்டன. நான் தோற்றுப்போனது கூட ஒரு நாடகம்தான். இது அறிவுசார்ந்த நிகழ்ச்சியல்ல. பொழுதுபோக்குதான் இதன் நோக்கம் என்று சொல்லியே என்னை ஒப்புக கொள்ள வைத்தார்கள்.

மக்களை ஏமாற்றிவிட்டார்களே என்று ஜனாதிபதி ஐசனோவர் மிகவும் வருந்தினார். க்விஸ் நிகழ்ச்சிகளுக்கென கடுமையான சட்டங்கள் புதிதாக இயற்றப்பட்டன. க்விஸ் நிகழ்ச்சிகளின்மீது அமெரிக்க மக்களுக்கு இருந்த ஒரு பிடிப்பு அகன்றுபோனது. பிறகு, மக்களின் கோபத்தின் முன்னால் எந்தவொரு க்விஸ் நிகழ்ச்சியும் பெரிதாக எடுபடாமல் போய்விட்டது.


சார்ள்ஸ் வான் டோரண்ட்

**இருமல் மில்லினியர்!**

இங்கிலாந்தில், ஐ.டி.வியில், Who wants to be a millionaire? என்றொரு நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. தொகுப்பாளர், கிறிஸ் டோரண்ட்.

ஆரம்பத்தில் வழக்கமான க்விஸ் நிகழ்ச்சியாக இதை அணுகிய பார்வையாளர்கள், நாளடைவில் டோரண்ட், தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக்கொண்டு நிகழ்ச்சியை நடத்திய லாகவத்தால் மயங்கிப் போனார்கள்.

'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி'யில் சூர்யா, எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை கால் என்றெல்லாம் கேட்கிறாரே என்று பலருக்கும் நெஞ்சு கொள்ளாத வருத்தம். ஆனால், 'மில்லினியர்' நிகழ்ச்சியின் வடிவமே அப்படித்தான். ஆரம்பத்தில், மிகச்சுலபமான கேள்விகளைக் கேட்பதால், போட்டியாளர்கள் குறைந்த பரிசையாவது பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் உருவாக்கப்படுகிறது. 12 கேள்விகளுக்குச் சரியாக பதில் சொல்லிவிட்டால் 1 மில்லியன் பவுண்ஸ் பரிசு. நமது மதிப்பில் இருபது கோடி ரூபா.

மில்லினியர் நிகழ்ச்சியின் மிகப் பெரிய மோசடி, 2001இல் நடந்தது. 2001 செப்டெம்பர் 9, 10ஆம் திகதிகளில நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், சார்ள்ஸ் இங்ராம் என்கிற இராணுவ மேஜர் கலந்துகொண்டார்.

இங்ராமுக்கு எந்தக் கேள்விக்கும் தெளிவான விடைகள் தெரியாது என்பது முதல் கேள்வியிலிருந்தே கண்கூடாகத் தெரிந்தது. ஆனாலும், தொடர்ந்து சரியாகப் பதில் சொல்லி, இறுதியில் உச்சக் கட்டத் தொகையான ஒரு மில்லியன் பவுண்ஸை இங்ராம் வென்றபோதுதான் பலரும் உஷாரானார்கள்.

இங்ராமின் வெற்றியில் ஏதோ தவறு இருக்கிறது என்று முடிவு செய்யப்பட்டு, முழு வீடியோவையும் அலசிப் பார்த்தார்கள் நிகழ்ச்சிக் குழுவினர். அப்போதுதான், இங்ராமின் செப்பிடு வித்தையைக் கண்டு அரண்டு போனார கள்.

இங்ராம் கலந்துகொண்ட சுற்றில், விட்டாக் என்பவரும் போட்டியாளராக இருந்தார். அவரும் இங்ராமின் மனைவி டயானாவும் இருமல் வழியாகச் சரியான விடைகளை எடுத்துச் சொன்னது வெளிச்சத்துக்கு வந்தது.


டயானா-இங்ராம்

இங்ராம், கேள்வியின் விடைகள் ஒவ்வொன்றையும் உரக்க வாசித்து, குழம்புவதுபோல நடிப்பார். அப்போது, சரியான விடை சொல்லும்போது விட்டாக் இருமுவார். ஒரு கேள்விக்கு டயானாவும் சூசகமாக இருமி தன் பங்களிப்பை அளித்தார். தீவிரமாக ஆராய்ந்து இதைக் கண்டு பிடித்த நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் உடனே பொலிஸுக்குத் தகவல் கொடுத்தார். இங்ராம், டயானா, விட்டாக் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டார்கள். இங்ராமுக்கு வழங்கப்பட்ட ஒரு மில்லியன் பவுண்ஸ் செக் தொகை திரும்பப்பெறப்பட்டது.

மூன்று பேரும் நீதிமன்றத்தில் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை தீவிரமாக மறுத்தார்கள். தமக்கு இருமல் சத்தம் எதுவும் கேட்கவேயில்லை என்றார் இங்ராம். ஆனால், ஆதாரங்கள் தெளிவாக இருந்தன.

ஒருமுறை, இங்ராம் தவறான விடை சொல்ல முயன்றபோது, விட்டாக் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு இருமியபடி 'நோ' என்றுகூட சொன்னது முக்கியமான ஆதாரமானது. இங்ராம், டயானாவுக்கு ஒன்றரை வருடச் சிறைத்தண்டனையும் விட்டாக்குக்கு ஒருவருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன.

பிறகு, 2003இல் ஐ.டி.வி, இங்ராம் மோசடி செய்த நிகழ்ச்சியை முதல் முறையாக நேயர்களுக்கு ஒளிபரப்பியது. அப்போது, நிகழ்ச்சியின் நடுவே இருமல் மருந்து ஒன்றின் விளம்பரம் ஒளிபரப்பானது.

இங்ராம் மீதான ஊழல் புகாரை மையமாகக் கொண்டு, விகாஸ் ஸ்வரூப், 'க்யூ அண்ட் ஏ' என்கிற நாவலை எழுதினார். மில்லியன் பவுண்ஸை வெல்ல ஒரு இராணுவ மேஜர் ஊழல் செய்ததாகக் குற்றம் சாட்டப்படும்போது, ஒரு ஏழைச்சிறுவனுக்கு இந்த நிலை ஏன் ஏற்படாது என்கிற அவருடைய கேள்வி, பிறகு, ஸ்லம்டோக் மில்லியனர் படமாகவும் ஆனது.

இன்றுவரை, இந்நிகழ்ச்சியில், 5 பேர் மட்டுமே ஒரு மில்லியன் டொலர பரிசைப் பெற்றுள்ளார்கள்.

இங்கிலாந்தில் இன்றும் Who wants to be a millionaire? சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது. கிறிஸ் டோரண்ட்தான் தொடர்ந்து இதன் தொகுப்பாளராக இருக்கிறார்.

**வந்தார் கம்ப்யூட்டர்ஜி**

இந்தியாவில், ஸ்டார் பிளஸ் சனலில், 2000 ஜூலையில், 'கௌன் பனேகா க்ரோர்பதி' (கே.பி.சி) தொடங்கப்பட்டது. க்விஸ் நிகழ்ச்சிகளின் விற்பன்னரான சித்தார்த்த பாசு, கே.பி.சி.யின் இயக்குநர்.

மில்லினியர் நிகழ்ச்சி, 100 நாடுகளுக்கு மேலாக ஒளிபரப்பப்பட்டாலும் எந்த நாட்டிலும் ஒரு சினிமா



நடிகர் நிகழ்ச்சியின் தொகுப்பாளராக இல்லை. கே.பி.சி.யில் அமிதாப் நுழைந்தவுடன் உடனடியாக இந்தியா முழுக்கக் கவனம் கிடைத்தது. டோரண்டுக்கு 'Is that your final answer?' என்கிற வாசகம் புகழைத் தேடிக் கொடுத்ததுபோல, அமிதாப், 'கம்ப்யூட்டர்ஜி, லாக் கியா ஜாயே' என்கிறபோது பார்வையாளர்கள் டிவிக்குள்ளேயே சென்றார்கள்.

ஒரு கோடியில் ஆரம்பித்து இப்போது பரிசுத்தொகை 5 கோடி வரை உயர்த்தப்பட்டுள்ளது.

**தென்னிந்தியக் கோடி!**

தமிழில், சன் டி.வி.யின் தயாரிப்பில், சரத்குமாரைத் தொகுப்பாளராகக் கொண்டு 'கோடீஸ்வரன்' ஆரம்பமானது. அமிதாப்பின் நிகழ்ச்சிக்குப் பின்னணியில் சித்தார்த்த பாசு இருந்ததுபோல கோடீஸ்வரன் நிகழ்ச்சிக்கு மூளையாக இருந்தவர் டெரிக் ஓ பிரயன்.

இப்போது, சித்தார்த்த பாசுவின் பிக் சினர்ஜி மீடியா, தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சியை நடத்துகிறது (உரிமம் ஸ்டார் டி.வி). கன்னட கோட்யாடிபதி (கே.கே) புனீத் ராஜ்குமாரும், மலையாள நிங்ஙள்க்கும் ஆகம் கோடீஷ்வரன் நிகழ்ச்சியை சுரேஷ் கோபியும் தொகுத்து வழங்குகிறார்கள்.

'சினிமாவில் என்னால் ஒன்றரைக் கோடி மக்களைத்தான் சேரமுடியும். ஆனால், நீங்களும் வெல்லலாம் கோடியில் ஆறு கோடி மக்களை நேரடியாகச் சந்திக்கிறேன்' என்கிறார் சூர்யா. சரி, ஒரு கோடி பரிசு பெற்றால் கைக்கு எத்தனை கிடைக்கும்? 45 இலட்சம் ரூபாயை வருமான வரியாகப் பிடித்தது போக 55 இலட்சம்(தான்) கிடைக்கும்.

# பௌத்த பீடாதிபதிக்கு யாழ். நகரில் பாராட்டுவிழா



மல்வத்து பீடத்தின் உபபீடாதிபதி அட்டபகஸ்கட சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ சுமண சித்தார்த்த கல்யாண திஸ்ஸாபிரான தேரரின் வடமாகாண பிரதி பிரதான சங்கை நாயக்க பதவி பிரமாண பாராட்டு விழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு நாகவிகாரை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பாராட்டு விழா, இறை வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு அட்ட பகஸ்கட சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ சுமண சித்தார்ந்த கல்யாண திஸ்ஸபிரான தேரரின் ஆசியுரை என்பன இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து தமிழ், பௌத்த சமயப் பேரவையின் தலைவர் ரவிக்குமார் வரவேற்புரையினையும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையுரையினையும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க சிறப்புரையையும் ஆற்றினார்.

தொடர்ந்து, அட்ட பகஸ்கட சுமண சித்தார்ந்த கல்யாண திஸ்ஸவிதான தேரர்க்குக் கட்டளைத் தளபதி உட்பட யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் யாழ். அரசாங்க அதிபர் இமெ ல்டா சுகுமார் மற்றும் இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகா ரிகள் எனப்பலரும் நினைவுச் சின்னங்களை வழங்கிக் கௌர வித்தனர்.

இந்நிகழ்வில், யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேச ராஜா, யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா, யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா உட்பட பல உயர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எஸ்)

## தீர்வு விடயத்தில்...

இலங்கை நாடாளுமன்ற தூதுக்குழு இந்தியாவுக்கு அண்மையில் மேற்கொண்ட நல்லெண்ண விஜயத்தின் அடிப்படையிலேயே இந்திய சர்வகட்சி எம்.பி.க்கள் குழுவின் இலங்கை விஜயம அமைந்திருந்தது.

ஆனால் வழமைக்கு மாறாக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கை விஜயத்தின் பயண அட்டவணையை இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு பதிலாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகமே ஏற்பாடு செய்திருந்தது. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்தப் பயண அட்டவணை ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் என நம்புகின்றோம். அந்த வகையில் அவர்கள் நாட்டுக்குள் எங்கு விஜயம் செய்யவேண்டும் என நாங்கள் எதுவும் கூறவில்லை. மாறாக அவர்கள் எமக்கு வழங்கிய பயண அட்டவணைக்கு ஏற்ப நாங்கள் ஏற்பாடுகளை செய்தோம்.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்தியாவில் சில கட்சிகள் இலங்கையை அசௌகரியப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டிருந்தன. அது தொடர்பில் நான் இந்திய தூதுக்குழுவை சந்தித்தபோது குறிப்பிட்டிருந்தேன். இறுதியில் மெனிக்பாம் முகாமுக்கு செல்லவேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அந்த நேரத்தில் நாங்கள் அசௌகரியத்துக்கு உட்பட்டோம். அத்துடன் எமது வெளிவிவகார அமைச்சும் அதனை அந்தளவு தூரம் விரும்பவில்லை.

ஆனால் ஜனாதிபதி அதற்கு இடமளிக்குமாறு கூறினார்.

அதன்பின்னர் இலங்கை வந்த இந்திய குழுவினர் என்னைச் சந்தித்தனர். அவர்களுக்கு நான் வடகின் அபிவிருத்தி குறித்து விளக்கியபோது அவர்கள் மீள்குடியேறப்பட்ட பிரதேங்களுக்கும் செல்ல வேண்டும் என்று கோரினர். உடனடியாக அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்தோம்.

அந்த வகையில் மீள்குடியேற்றப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய குழுவினர் அங்கு நிலைமைகளை பார்வையிட்டனர். மீள்குடியேற்றப் பகுதிகளில் காணப்படும் அனைத்து செயற்பாடுகளையும் பார்வையிட்டனர். இந்திய வீட்டுத்திட்டத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். அதுமட்டுமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்களையும் ஆராய்ந்தனர்.

அந்த வகையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பில் நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம். இந்தியாவின் அரசியல் நிலைமைகளுக்கு மத்தியில் குறிப்பாக தமிழகத்தில் இரண்டு கட்சிகள் தமது பிரதிநிதிகளை அனுப்பாத நிலையிலும் இந்தியக் குழுவினர் இலங்கை வந்தமை குறித்து அவரகளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இந்தியாவின் பல கட்சிகள் இதனைத் தடுக்க முயற்சித்திருந்தன. ஆனால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார.

## யாழ். மே தினத்தை...

நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துக் கொள்ளும் இரண்டு மேதினக் கூட்டங்கள் நடைபெற உள்ளதாக சிலர் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்ளும் உத்தியோகபூர்வமான ஒரே மே தினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே நடைபெறவுள்ளது. யாழ் நகரில் நடைபெறும் மே தினக் கூட்டத்திற்கு ஒரு தேர்தல் தொகுதியில் இருந்து தலா 100 பேரை கலந்துகொள்ளச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க் கட்சிகளும் கூடியளவில் மக்களை இந்த கூட்டத்தில் கலந்துக்கொள்ள செய்வதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளன எனவும் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## சர்வதேச அழுத்த...

அங்கு செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்திய எதிர்கட்சித் தலைவர், அதாவது பக்கத்து வீட்டு நபர் வந்து எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிட அனுமதி உள்ளது. அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என இந்திய பிரதிநிதிகளிடம் கூறுகின்றனர். இந்திய குழு சென்றதும் ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர அப்படி உறுதி அளிக்கவில்லை என்கிறார். தனி ஈழக் கோரிக்கையை கருணாநிதி ஐ.நா.விற்கு முன்வைத்துள்ளார். அரசின் இரட்டைவேடம் காரணமாகவே வெளிநாடுகள் எமக்கு அழுத்தம் கொடுக்கின்றன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஊரியால் வந்த...

சென்றுவரும் வேளை ஊரிகளை எடுத்துவந்து வீட்டின் முன்பக்க வாசலில் வீட்டுக்காரர்கள் போட்டுள்ளனர். பக்கத்து வீட்டுக்காரர் அந்த வழியாக வரும்போது ஊரி காலில் குத்தியுள்ளது. இதனால் ஊரி வாசலில் போட்ட வீட்டுக்காரருடன் ஊரி குத்தியவர் சண்டைபோட்டபோது சண்டைக்குப் போனவர் மண்வெட்டியால் சியான் என்பவரின் தலையில் தாக்க முற்பட்டபோது கையால் தடுத்துள்ளார். இதனால் மண்வெட்டி அவரது கையைப் பிளந்துள்ளது.

அதேவேளை, மகனைத் தாக்கவரும்போது விலக்குப் பிடிக்கச் சென்ற தாயாரையும் குறித்த நபர் தாக்கியுள்ளதுடன், தாக்கியவரும் கைமுறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். (எஸ்)

## வடக்கு தோல்வி...

என்னைச் சம்பந்தப்படுத்தி வெளியாகியுள்ள கதைகள் தொடர்பில் அரச மேல் மட்டத்தினைச் சேர்ந்த எவரும் இதுவரை என்னுடன் பேசவில்லை. நானும் அவர்களுடன் கதைக்கவில்லை.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலை அரசாங்கம் முன்கூட்டி நடத்துவதென்பது என்னுடைய பார்வையில் பிழையானதொரு விஷயமாகும். மத்திய அரசாங்கத்தினைத் தக்க வைத்துக்கொள்வதற்கான ஓர் உபாயமாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. வடக்குத் தேர்தலில் ஏற்படப்போகும் தோல்வியினைச் சரிசெய்வதற்காகவே இவர்கள் கிழக்குத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு யோசிக்கின்றனர். ஆனால், அதிகாரப் பரவலாக்கத்தினை திறந்த மனதுடன் அங்கீகரிப்பவர்கள் எவரும் - முன்கூட்டியே கிழக்குத் தேர்தல் நடத்தப் படுவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கிழக்கு மாகாண்த்துக்கான முதலமைச்சர் எனும் விடயத்தினை தேவையற்றதொரு சந்தர்ப்பத்தில் நாம் பேசத்தேவையில்லை. ஒரு வருடத்துக்கு முன்பே இந்த முதலமைச்சர் விவகாரம் பற்றி பேசத் தொடங்கி விட்டார்கள் மு.காங்கிரஸ் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒப்பான ஒரு சிறுபான்மை இனத்தின் அதிகபட்ச ஆதரவைப் பெற்ற அரசியல் இயக்கமாகும். இந்த இயக்கத்தை ஏமாற்றுவதென்பது சாமான்யமானதொரு விடயமல்ல.

மு.காங்கிரஸ் என்பது கையாலாகாத ஒரு போடுகாய் கட்சியாக இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்போடுதான் கிழக்கு மாகாணத் தேர்தல் குறித்த கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கேற்றாற் போலதான் இப்போது வித்தியாசமான காய் நகர்த்தல்களும் நடந்து கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

## இந்தியக்குழுவின்...

இலங்கை மனித உரிமை நிலைமை தொடர்பான விவாதம் ஐ.நா. மனித உரிமைக் குழுவில் வர இருக்கிறது. அப்போது, இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதனால் மனித உரிமைகள் தொடர்பான விஷயத்தில் எங்களுக்கு கூடுதல் அவகாசம் தரப்பட வேண்டும் என்று கோரவேண்டும் என்பதே இத்தகைய குழு அமைக்கப் படுவதற்கான நோக்கமாகும் என்றார் பிரேமச்சந்திரன்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற வேண்டும் என்று இந்திய மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், இந்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்திருக்கிறது.

வாக்குறுதிகளை மீறுவதையே இலங்கை அரசு வழக்கமாகக் கொண்டிருக்கிறது என வரலாறு இருப்பதன் காரணமாகவே இந்த அழைப்பை ஏற்கமுடியவில்லை என்று பிரேமச்சந்திரன் கூறி யிருக்கிறார். 1990 களில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பது தொடர்பாக மங்கள முனசிங்க தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு நூற்றுக்கும் மேற்பட்ட முறை கூடி விவாதித்தது. ஆனால், இந்தக் குழுவின் பரிந்துரைகள் எதுவும் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

இதன் பிறகு அமைக்கப்பட்ட மற்றொரு நாடாளுமன்றக் குழு, அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் சாசன வரைவைத் தயாரித்து அளித்தது. ஆனால், எதிர்க் கட்சியினர் இந்த வரைவை நாடாளுமன்றத்துக்குள்ளேயே எரித்ததால் இந்த முயற்சி கைவிடப்பட்டது. ராஜபக்ஷ பதவிக்கு வந்தபிறகு, அதிகாரப் பகிர்வு தொடர்பாக தீர்வு காண்பதற்கு நிபுணர்கள் குழுவின் உதவியுடன் செயல்படக் கூடிய அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு (ஏ.பி.ஆர்.சி.) அமைக்கப்பட்டது. ஆனால் இந்த இரு குழுக்களின் யோசனைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2010 ஆம் ஆண்டில் போர்ப் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணையம் அமைக்கப்பட்டது. அறிக்கையும் அளித்தது. ஆனால், இந்த அறிக்கையை முழுமையாக அமுல் படுத்த முடியாது என்று அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் வெளிப்படையாக அறிவித்தனர். உடனடியாகச் செயல்படுத்த வேண்டும என்று இந்தக் குழு தெரிவித்த யோசனைகள்கூட செயற்பாட்டுக்கு வரவில்லை.

கடந்த ஜனவரியில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்று ராஜபக்ஷ உறுதியளித்தார். ஆனால், கிருஷ்ணா இந்தியாவுக்கு திரும்பும் முன்னரே, அப்படியொரு உறுதியைத் தாம் அளிக்கவில்லை என்று ராஜபக்ஷ மறுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முழுமையான பேச்சுகளுக்குப் பிறகு, நாடாளுமன்றக் குழுவை அமைத்து ஒப்புதல்பெறலாம் என்று ராஜபக்ஷ கூறியிருந்தார். ஆனால், அதற்கு எதிர்மாறாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகளிலிருந்து அரசு தன்னிச்சையாக விலகிக்கொண்டது.

இப்படி உறுதிமொழிகளை ஒவ்வொரு முறையும் மீறிக்கொண்டிருக்கும் அரசின் பேச்சைக் கேட்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எப்படி இணைய முடியும் என்று பிரேமச்சந்திரன் கேட்டுள்ளார். இந்திய எம்பி.க்களின் யோசனையை ஏற்று நாடாளுமன்றக் குழுவில் நாங்கள் இணைந்தால், எங்களை ஜோக்கர்கள் என்று இலங்கைத் தமிழர்கள் நினைத்துக் கொள்வார்கள் என்றார் அவர்.

## புதிய நாடுகளின்...

அதனைச் சமாளிப்பதற்கு அங்கத்துவ நாடுகளின் உதவி தேவைப்படுகின்றது ஆனால், 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீதான தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த சீனா, ரஷ்யா, கியூபா, பங்களாதேஷ், சவூதி அரேபியா மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகளுக்கு 2012 ஆம் ஆண்டுடன் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவக் காலம் நிறைவடைகின்றது

எனவே, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கான செல்வாக்கு பலவீனமடைந்து ஆதரவு வீதம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படலாம். இத்தகையதொரு நிலை ஏற்படுமாயின் இலங்கை சர்வதேச பிடியில் இருந்து மீண்டெழ முடியாதவாறு சிக்கிவிடும் இந்த அபாயகரமான நிலையை உள்ளூர அறிந்து வைத்துள்ளமையாலேயே அரசாங்கம் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் புதிதாக அங்கத்துவம் பெறும் நாடுகளை வளைத்துப் போடுவதற்கு முயற்சிக்கின்றது

இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்போதிலிருந்தே ஆரம்பித்துவிட்டது என்றும், இந்தப் புதிய வியூகத்திற்கிணங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆசிய், ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்வார் என்றும் இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவிக்கின்றன

அதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அடுத்த ஜெனிவாக் கூட்டத்தொடரின் போது (2013) விசேட அறிக்கை ஒன்றை விடுக்கவுள்ளார். இவ்வறிக்கையில் இலங்கை அரசாங்கம் தனது நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள், மனித உரிமைகள் விவகாரங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், ஜெனிவாத் தீர்மானத்துக்கிணங்க கொழும்பு செயற்பட்டுள்ளதா என்பது உட்பட முககிய பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் எனத் தெரியவருகின்றது

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இந்த மீளாய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே சர்வதேச சமூகம் இலங்கை விவகாரம் குறித்தான தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கும் என்றும் கூறப்படுகின்றது.

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு பயங்கரவாத சந்தேக நபர் விடுதலை

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இருந்தும் இவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் மற்றொரு பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குள்ளதால் அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கல்முனை நாவிதன்வெளியைச் சேர்ந்த கோபாலசிங்கம் இளங்கோ (வயது-38) என்பவர் புலிகள் அமைப்பிலிருந்து அரசுக்கு எதிராகச் செயற்படும் விதமாக போராயுதப் பயிற்சியும், பொறி அமைவு முறைபற்றியும் பயிற்சி எடுத்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 2009 ஆம் ஆண்டு மே 16 இல் ஓமந்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பின்னர் கடந்த வருடம் நவம்பர் 24 இல் யாழ்.மேல் நீதிமன்றத்தில் இவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இவருக்கெதிராக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சான்றுப்பொருளாக இருந்தது. கடந்த மாதம் 29 ஆம் திகதி இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என மேல் நீதிமன்ற நீதிபதி அதனை நிராகரித்திருந்தார்.

எதிரிக்கெதிராக வேறு சான்றுப் பொருட்கள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக நேற்றுவரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிக்கு எதிராக வேறு சான்றுகள் இல்லை எனக் காணப்பட்டதினால் இக்குற்றம் நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிருபிக்கப்படாமை காரணமாக எதிரியை விடுதலை செய்து யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தீர்ப்பளித்தார். (எஸ், 137)

# இராஜதந்திர தவறிழைத்து கேலிக்குள்ளாகிய பீரிஸ்



இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் வித்தியாசம் தெரியாமல், செய்தியாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தடுமாறியது இராஜதந்திர வட்டாரங்களில் மிகவும் கேலிக்குரிய விவகாரமாகப் பார்க்கப்படுகிறது.

அண்மையில் பலஸ்தீன ஜனாதிபதி அப்பாசுடன கொழும்பு வந்திருந்த பலஸ்தீன வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், தன் பக்கத்தில் பலஸ்தீன வெளிவிவகார அமைச்சரை வைத்துக் கொண்டே, மதிப்புக்குரிய இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் றியாட் அல் மலிகி, மதிப்புக்குரிய இஸ்ரேல் தூதுவர் என்று வரவேற்கத் தொடங்கினார்.

அப்போது அவருக்கருகில் இஸ்ரேலிய வெளிவிகார அமைச்சரோ, தூதுவரோ இருக்கவில்லை. பலஸ்தீன விவகார அமைச்சரும் தூதுவரும் தான் உடனிருந்தனர்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இவ்வாறு கூறியதும் பலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் மற்றும் தூதுவரின் முகங்கள் சிவந்தன. ஒன்றுக்கு இரண்டு முறை இஸ்ரேல் என்று அடுத்தடுத்து பீரிஸ் கூறியது அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆனால், பீரிஸ் மிகச் சாதாரணமாக மன்னிக்கவும் என்று கூறிவிட்டுத் தொடர்ந்து பேசினார்.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் குறைந்தபட்ச வித்தியாசத்தைக் கூட உணராமல், வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மிகப்பெரிய இராஜதந்திரத் தவறை இழைத்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று விமர்சித்துள்ளது.

# ஜனாதிபதியால் மட்டுமே முடியும்

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனித் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து ஜனாதிபதி மாத்திரமே நீக்க முடியும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவினால் அவரை அப்பதவியிலிருந்து நீக்க முடியாதென அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச அழுத்தங்களினாலோ அல்லது சதித்திட்டவாதிகளின் நடவடிக்கைகளினாலோ அரசாங்கத்தை கவிழ்க்க முடியாவிடினும் எமக்குள் உள்ள குறைபாடுகளால் இந்த அரசாங்கம் கவிழ வாய்ப்பு உண்டு.

அதனால் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



தென் கொரிய ஜனாதிபதி லீ மயும் பக்கின் அழைப்பை ஏற்று அந்நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினருக்கு அந்நாட்டின் சோல் நகர விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. தென் கொரியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி உட்பட இலங்கைக் குழுவினரை வரவேற்பதைக் காணலாம்.

# பள்ளிவாசல் அகற்றம் குறித்து கூட்டம் நடக்கவில்லை

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

தம்புள்ளை நகரிலுள்ள பள்ளிவாசலை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் டி.எம் ஜயரத்ன பிரதமர் அலுவலகத்திலிருந்து அறிவித்துள்ளதாக அறிக்கையொன்று வெளியாகியது. ஆனால் இப்படியான அறிக்கையொன்று பிரதமர் அலுவலகத்திலிருந்து வெளியாகியிருக்க வாய்ப்பில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கம்பளையில் கூட்டம் எதுவும் நடக்கவில்லை என்றும் அப்படியான கூட்டத்தில் தானோ மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவோ கலந்து கொள்ளவும் இல்லை என்றும் அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

பல பரம்பரைகளாக தம்புள்ளை நகரில் முஸ்லிம் மக்கள் சென்று வழிபட்டுவரும் பள்ளிவாசலை அகற்றுமாறு கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

அண்மையில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை கொண்டுவந்த போது, முஸ்லிம் நாடுகளும் இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்களும் ஒட்டுமொத்தமாக அரசாங்கத்தை ஆதரித்திருந்த நிலையில், தம்புள்ளை நகரில் நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னணியில் ஏதாவது சக்திகள் இருக்கலாம் என்று கருதுவதாகவும் அமைச்சர் பௌசி மேலும் தெரிவித்துள்ளார்.

# தாக்குதலைக் கண்டித்து பணிப்பகிஷ்கரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் இல்லம் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு உள்ளானதைக் கண்டித்து நகரசபை ஊழியர்கள் நேற்றுக் காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரையான ஒரு மணி நேரப்பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பதாதைகளைத் தாங்கியவண்ணம் நகரசபை வளாகத்திற்கு வெளியே நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் சபை உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

# பரிந்துரை அமுலாக்கம் மூலம் அழுத்தத்தை குறைக்கலாம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு என்பதால், அதன் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரும் முன்னர் அரசாங்கமே அதனை செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினாலேயே ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதை புறந்தள்ளி வரும் நிலையில், அரசாங்கத்தின் இந்தத் தவறு காரணமாகவே சர்வதேசத்தில் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்படுகிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகள் இது தொடர்பாக சுமத்தும் குற்றச்சாட்டுகள் குறித்து அரசாங்கம் உணர வேண்டும். பரிந்துரைகளை அமுல்படுத்தாததன் காரணமாக இந்த நாடுகள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன எனவும் அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்

# துப்பாக்கியை பறிக்க முயற்சி இருவருக்கு நீதிமன்றம் பிணை

(திருநெல்வேலி)

மதுபோதையில் பொலிஸாரின் 'துப்பாக்கியைப் பறிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இருவர் நேற்று யாழ்.நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.நரகப் பகுதியில் உள்ள கடையொன்றினுள் மது போதையில் குழப்பம் விளைவித்த இவ்விருவரையும் கைது செய்யச் சென்ற பொலிஸாரிடமிருந்த கைத்துப்பாக்கியை இவர்கள் பறிக்க முயன்றுள்ளார்கள். இவர்களை மடக்கிப் பிடித்த பொலிஸார் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்தவர்களாவர். இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி மு.றெமிடியஸ், சந்தேக நபர்கள் திட்டமிட்டு இச்செயலைப் புரியவில்லை எனவும், மதுபோதை தலைக்கேறிய நிலையில் செய்வதறியாது இக்குற்றத்தை புரிந்துள்ளதாகவும், இவர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வழக்கை ஆராய்ந்த யாழ்.நீதவான் மா.கணேசராசா 50 ஆயிரம் ரூபாவுக்கான இரண்டு ஆள் பிணையிலும் செல்வதற்கு உத்தரவிட்டார். (137)

# வன்னியில் பெருமழை இயல்பு நிலை பாதிப்பு

வன்னிப் பகுதியில் நேற்றைய தினம் தொடர்ச்சியாகப் பெய்த பெரும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம், மல்லாவி, துணுக்காய் மற்றும் கனகராயன்குளம் பகுதிகளில் நேற்று நண்பகல் ஆரம்பித்த மழை இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தொடர்ந்து பெய்த வண்ணமிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்றைய தினம் பாடசாலை ஆரம்ப தினமாகையால் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். இன்றைய தினமும் மழை நீடிக்குமாக இருந்தால் இப் பகுதிகளில் உள்ள குளங்கள் வான் பாயுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வளிமண்டலத்தில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக நாட்டில் இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (148)

# பரிந்துரை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மீண்டும் சந்தித்து விவாதிக்கவுள்ளன

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள இச்சந்திப்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் கையளித்துள்ள அறிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளது

# இந்தியா திணித்த சுமை; 13ஆவது திருத்தச் சட்டம்

## என்கிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவினால் இலங்கை மீது பலவந்தமான முறையில் திணிக்கப்பட்ட ஓர் தேவையற்ற சுமையாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். மாகாணசபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியதில்லை. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை முன்மொழிவுகள் தொடர்பில் கூட்டணி கட்சிகளின் கருத்துக்களை கோரும் ஜனாதிபதியின் முயற்சி வரவேற்கப்பட வேண்டியது என்றார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.